Registered No. M. 2330

'SIDDHANTHAM'
Vol. 29—No. 10

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 29 | துன்முகி ஐப்பசி 1956 அக்டோபர் | இதழ் 1

உள்ளுறை

பத்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
2, சீதாராம நகர், கடலூர் N. T.

ஆண்டுச் சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

செய்திச் சுருக்கங்கள்

சைவ சித்தாந்த மாநாடு :—திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில், திருவனந்தபுரத்தில், செப்டம்பர் 28, 29, 30 தேதிகளில் மிகவும் சிறப்புடன் நிகழ்ந்தது. காரைக்குடி அழகப்பர் கல்லூரி முதல்வர் திரு. எ. என். டாம்பி பி.எ. (Oxon Bar-at-Law) அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார்கள். நாகர்கோயில் இந்துக் கல்லூரி முதல்வர் திரு. டாக்டர் பா. நடராஜனார், எம்.எ., டி. லிட்., ஓய்வுபெற்ற உயர் நீதிமன்றத் தலைவர் திரு. சங்கரநாராயண ஐயர் பி.எ., பி.எல்., சித்தாந்த சரபம் மகா மகோபாத்தியாய சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் மூன்று நாட்களிலும் முறையே தலைமை தாங்கினார்கள். திருவனந்தபுரம் முன்னாள் நிதி அமைச்சர் திரு. எஸ். நடராஜபிள்ளை, சைவப்பிரகாச சபைத் தலைவர் திரு. ஆர். வைத்தியலிங்கம் பிள்ளை, திரு. ஆர். எஸ். எ. இராமகிருஷ்ண செட்டியார், திருநெல்வேலி கணபதி ஆலை அதிபர் திரு. எஸ். எஸ். அருணாசலம் பிள்ளை ஆகியோர் வரவேற்புரை அறிமுகவுரைகள் நிகழ்த்தினர். சித்தாந்த கலாநிதி குலசை. வீர சிவசுப்பிரமணியம், மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், எம்.எ., திருவனந்தபுரம் சர்வகலாசாலை பிரின்ஸிபால் டாக்டர் சி. எஸ். வெங்கடேஸ்வரன் எம்.எ., பி.எச்.டி., திருமுருக கிருபானந்தவாரியார், திரு. கே. ஆறுமுக நாவலர் முதலிய அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர்.

சமய வளர்ச்சி மாநாடு :—ஆரல்வாய்மொழி மீனாட்சி அம்மை கோயில் முன்பு, மெய்கண்டார் காவணத்தில் செப். 29, 30, அக். 1-ஆம் தேதிகளில் பெருஞ்சிறப்புடன் நடைபெற்றது. மாட்சிமை தங்கிய திரு. கொச்சி அரசப் பிரமுகர் திரு. சித்திரைத் திருநாள் மன்னர் மாநாட்டைத் திறந்துவைத்தார்கள். மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் தவப்பெருந்திரு. சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தவப்பெருந்திரு. குன்றக்குடி அடிகளார், தமிழவேள் திரு. பி. டி. ராஜன், எம்.எல்.எ. ஆகியோர் மூன்று நாட்களிலும் தலைமை ஏற்றனர். திருவிதாங்கூர் அறநிலையப் பாதுகாப்புக் குழுத்தலைவர் திரு. பி. சாமிநாதப்பிள்ளை, பி.எ., பி.எல்., டாக்டர் பா. நடராஜன். எம்.எ., டி. லிட்., திருமுருக கிருபானந்தவாரியார், பழனி. சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகள், திரு. எம். சங்கர நாராயணன் செட்டியார், விருதை வள்ளல் ச. வெள்ளைச்சாமி நாடார், சைவப்பெரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.எ.,

Regd. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 29 | துன்முகி ஐப்பசி 1956 அக்டோபர் | இதழ் 10

இன்னும் நிரம்ப அறிவு தேவை

(ஆசிரியர்)

"*அறிந்திரா மானுடத் தன்மை*"—Man the unknown—என்ற தலைப்பில் டாக்டர் அலெக்சிஸ் காரெல் என்ற ஒரு மேல் நாட்டு அறிஞர் ஒரு நூலை எழுதியிருக்கிறார். அவ்வறிஞர் நோபல் பரிசு பெற்றவர். அவர் எழுதிய இந்நூல் பலவேறு நாடுகளிலும் பாராட்டப்பட்டுப் பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அந்நூல் ஆங்கிலத்தில் மட்டும் 14 பதிப்புக்கள் அச்சிடப்பட்டு இலட்சக் கணக்கில் விற்பனை ஆகியிருக்கிறது. ஆகவே அந்நூலில் கண்ட கருத்துப் போக்கு மிகவும் உயர்ந்ததெனக் கூறுவதில் மிகையில்லை. மனித இயல்புகளைப்பற்றி நாம் தெரிந்துள்ள செய்திகளைக் காட்டிலும் தெரியாத செய்திகள் மிக இருக்கின்றன என்றும், அவைகளைத் தெரிந்துகொள்ள இன்னும் மிகுதியாக ஆராய்ச்சிகள் செய்யவேண்டுமென்றும், அவ்வாறு செய்தால்தான் மனிதன் தன் முழு ஆற்றலையும் பெறமுடியும் என்றும், தற்போது உள்ள ஆராய்ச்சி அவனை உயிரற்ற அறிவற்ற பொருள்களில் சிறைப்படுத்தி யிருக்கின்றன என்றும், அச்சிறை நீக்கி உண்மை உரிமையை அவன் பெற முயலவேண்டும் என்றும் இந்நூல் அறிவுறுத்துகின்றது.

இவ்வெண்ணப்போக்கு மேல் நாட்டாருக்குப் புதிதாக இருந்தது. அவர்கள் நாளது வரையில் தங்களுடைய

ஆராய்ச்சிகளும் விஞ்ஞான சோதனைகளும் மிக மேன்மையானவைகள் என்றும், தாங்கள் உண்டுபண்ணிய இயந்திரங்களும் கருவிகளும் மனிதனுக்கு உண்மையான அறிவு வளர்ச்சியும் இன்பமும் தந்திருக்கின்றன என்றும் பெருமிதப்பட்டு இருந்தார்கள். இந்நூலாசிரியரோ இவைகள் சரியான அறிவு வளர்ச்சிகள் அல்ல என்றும் உண்மையான இன்பம் இவைகள் தரவில்லை யென்றும் இன்னும் நிரந்தரமான உயர்ந்த அறிவு மறைபொருளாக இருக்கின்றது என்றும் கூறவே அச்சொற்களைக் கண்டு வியப்பு அடைந்து அந்நூலை மிக நுணுக்கத்தோடு மேல் நாட்டார்களும் அவர்கள் போக்கில் போகிற கீழ்நாட்டார்களும் படித்து மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதே கருத்தைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நமது நாட்டுச் சமயப் பெரியார்கள் கூறியுள்ளதைத் தற்கால அறிஞர்கள் அறியவில்லை. அறிந்திருந்தால் இவ்வாறு வியப்படைய மாட்டார்கள்.

இக்கருத்தை விளக்கி நமது முன்னோர்கள் எந்த முறையில் இதே கேள்வியைக் கேட்டு ஒரு உயரிய முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்று ஆராய்வோம். அவ்வாறு ஆராய்வதற்குமுன் டாக்டர் காரெல் கூறியுள்ள கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுவோம். அவைகளைக் கூறினாலன்றி ஒற்றுமை வேற்றுமைகளை அறியமுடியாது அல்லவா; அந்த வகையில் சில கருத்துக்களையும் அக்கருத்துக்களை ஆண்டு இருக்கும் முறைகளையும் எடுத்துக் கூறுவோம். டாக்டர் அவர்கள் மேல்நாட்டுக்கு விஞ்ஞானத்தை எடுத்துக் காட்டும் முறையில் கணக்கற்ற விஞ்ஞானச் சொற்களை ஆண்டிருக்கிறார். அவைகளுக்குப் போதிய தமிழ்ச் சொற்கள் கிடைப்பது அரிதாகையால் அவைகளை விட்டுவிட்டு மேல் நோக்காகக் கருத்துக்களைமட்டும் கூறுவோம்.

ஏற்கெனவே பெற்ற அறிவு

உலகில் இரண்டுவகைப் பொருள்கள் இருக்கின்றன. உயிருள்ளவை உயிரற்றவை என்று இரண்டாக எப்பொருளையும் வகுக்கலாம். உயிருள்ள பொருள்களில் மனிதன் மற்றெல்லாவற்றிலும் உயர்ந்தவன். ஏனைய உயிர்கள் தோன்றி, உணவு உண்டு, பெருக்கி இறப்பதே தொழிலாகக் கொண்டு உள்ளன. மனிதனே அறிவு பெற்றவன்.

அந்த அறிவைக்கொண்டு, உணவு, பெருக்கம் இந்த இரண்டோடு போதுமென்றிராமல் உலக இயல்புகளை அறிந்து தன் இயல்புகளை அறிந்து புதுக் கருவிகளை உண்டுபண்ணித் தன் இன்பத்தை மிகுதிப்படுத்த முயலுகிறான். இந்த வகையில் மனிதன் ஏனைய உயிர்களைக் காட்டிலும் சிறந்து விளங்குகிறான். அவன்பெற்றுள்ள அறிவின் பலனை இன்னதென்று விளக்கிக் கூறுவாம்.

மனிதன் தோன்றின நாள் முதல்கொண்டு தன்னைச் சூழ்ந்துள்ள பொருள்களைக்கண்டு அவைகளின் இயல்புகளை அறிய முயன்றான். நீர், நிலம், தீ, காற்று, விண் இவைகளைக் கண்டு இவைகளின் குணங்களை அறிய முயன்றான். இவைகளைக்கொண்டு பயிர் பச்சை முதலியவைகளை விளைவித்து உணவுப் பொருள்களைத் தேடிக்கொண்டான். தாழ்ந்த உயிர்களைப்பெருக்கித் தனக்கு உணவாகவும் தொழில் புரிவனவாகவும் பழக்கிக்கொண்டான். விண்ணைப்பார்த்து மீன்களை எண்ணி அவைகளின் அசைவுகளைக் கணக்கிட்டு முற்காலம் பிற்காலம் இவைகளை அறிய வகைதேடினான். இவ்வாறு முயலுகையில் ஒன்றன்பின் ஒன்றாக, பூதநூல், இரசாயனநூல், தாவரநூல், உயிர்நூல், கணக்குநூல், வானநூல் முதலிய அறிவு நூல்களைப் பெருக்கி அங்கே கண்ட இயற்கை விதிகளை அறிந்து பற்பல இயந்திரங்களையும் போக்கு வரவு சாதனங்களையும், கணக்கற்ற கருவிகளையும் உண்டுபண்ணித் தன் வாழ்க்கையை இலகுப்படுத்திக் கொண்டான். இந்த வகையில்செய்த ஆராய்ச்சிகளின் பலனாகப் பல இன்பங்களோடு துன்பங்களையும் அடைகிறான். காந்தம், மின்சாரம், அணுசக்தி இவைகளால் பல இன்பங்களைப் பெருக்குகிறான். ஆனால் இவைகளால் பலவித துன்பங்களையும் அழிவுகளையும் உண்டாக்கிக் கொள்ளுகிறான். இவ்வித அறிவு இவனை எந்த இடத்திற்குக் கொண்டுபோய் நிறுத்துமோ கூறமுடியாது. இவன் செய்துகொண்டு இருக்கும் ஆராய்ச்சியின் பலனாக இவனே உயிரற்ற பொருள்களின் ஆற்றல்களுக்கு அடிமையாகி வருகிறான். இயந்திரங்களுக்கு அடிமை, கருவிகளுக்கு அடிமை, அழிவு அரக்கர்களுக்கு அடிமை முதலான அடிமை நிலைகளுக்குள் சிறைப்பட்டுத் தவிக்கிறான். அரபிக் கதைகளில் மீன் பிடிப்பவன் ஒருவன் ஒரு இரும்புப் பாத்திரத்தைத் திறக்க அதிலிருந்து

வெளிவந்த ஒரு பூதம் அவனையே அழிக்கத் தொடங்கின தாக ஒரு கதை உண்டு. அந்தக் கதைபோல மனிதன் தான் இயற்றிய இயந்திரங்களுக்கே அடிமையாகி அவைகளுக் குச் சிறைப்பட்டு உழல்கிறான். ஆகவே அவன் நிலைமை மிகக் கேவலம் ஆகிக் கற்றறி மூடனாய்ப் பாழடைகிறான். அவனுடைய அறிவே அவனை வஞ்சித்து அடிமையாக்கி வைக்கிறதல்லவா? இப்போக்கு சரியா? ஆராயுங்கள்.

இனிப் பெறவேண்டிய அறிவு

மனிதன் தன்னைச் சுற்றிலும் இருந்த உயிர்களையும் அவற்றின் இயல்புகளையும் ஆராய்ந்தான். ஆனால் அந்த ஆராய்ச்சி உயிரற்ற பொருள்களின்மீது செலுத்திய ஆராய்ச்சியைப்போல் ஆழ்ந்தும் அகன்றும் இருக்கவில்லை. மேலும் அவ்வுயிர்களில் சிறந்த உயிராகிய தன் நிலையைப் பற்றிச் சரியாக ஆராயவில்லை. மனிதனுடைய உடற் கூறு கள் அவைகளுக்குவரும் நோய்கள் அவைகளைத் தடுக்க மருந்துகள் இவைகளைமட்டும் ஆராய்ந்தான். அதற்கு விஞ் ஞானம் உதவிற்று. அந்த ஆராய்ச்சி உயிரற்ற பொருள் களில் செய்த ஆராய்ச்சியைப்போல் அத்தனை வெற்றி தர வில்லை. மனிதனுடைய உடற்கூறுகள் உயிரற்ற பொருள் களைப்போல் சாதாரணமானதல்ல. மிக உயரிய சேர்க்கைத் தத்துவங்களைக் கொண்டவை. ஆராய்ச்சி மிகவும் கடின மானவை. மேலும் அவனுடைய உறுப்புக்களில் மிகச் சிறந்தவை ஐம்புலன்களும் மூளையும் நரம்புகளுமேயாம். இவைகள் எப்படி வினை செய்கின்றன என்று நாளதுவரை தெரியவில்லை. மேலும் மனிதனுடைய உணர்ச்சிகள் நினைவு கள் அவற்றின் நிலைகள் இவைகளை அறிவது மிகமிகக் கடி னம். இவைகள் எல்லாவற்றிலும் மர்மமாக உள்ளது அவ னுடைய உயிரே ஆகும். அதனை ஆராய்ந்து அதன் இயல்பை மனிதன் ஆராயத் தொடங்கவில்லை. தன்னை அறி தல் மிக உயரிய ஆராய்ச்சிக்கும் அப்பால் பட்டதாகும். மனிதனுக்கு ஆன்மா என்று சொல்லப்படும் உயிர்த் தத்து வம் உளது என்பது பன்னாட் கொள்கை. அது எத்தன்மை யது? அதன் குறிக்கோள் என்ன? அதனை ஆளுதல் எப்படி? என்ற கேள்விகள் எழும்புகின்றன. சில தத்துவ ஞானி களும் சமய ஞானிகளுமே இவ்வாராய்ச்சியில் புகுந்திருக்

கிறுர்கள். அன்னுர்கள் கூறும் கொள்கைகளுக்கு நேரான சான்றுகள் நாளதுவரை கூறப்படவில்லே. அவைகளேச் சோதனைமுறையில் அறிந்துகொள்ள முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லே. நாளதுவரையில் சோதித்தவைகள் எல்லாம் மனே ஆராய்ச்சி, வசிகரச்செய்கை, இறந்த மக்களோடு பேசி அறிதல் என்ற சில செய்திகளே ஆகும். இவைகளுக்கும் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சி செய்யப் படவில்லே.

மனிதன் தான் கண்டுபிடித்த ஆராய்ச்சிகளில் பட்டிக் காட்டு வாழ்க்கையிலிருந்து பட்டின வாழ்க்கைக்கு வந்த இலகு வாழ்க்கை, இன்ப வாழ்க்கை என்ற நிலேயேயன்றி மனிதன் தன்னே அறிந்து தன் ஆயுளே நீடிக்கச்செய்து தன் உயிரைக் காப்பாற்றி அதன்மேன்மை அறிதற்கு உள்ள செயல்கள் ஒன்றும் இல்லே. தன் ஆன்மா ஒன்றைத் தவிரத் தன்னே ஆளும் வேருெரு மெய்ப்பொருள் உண்டோ என்பதையும் நேரடியாக அவன் அறிந்துகொள்ளவில்லே. ஆகவே அவன் இத்தனே ஆயிரக் கணக்கான ஆண்டுகள் வாழ்ந்தும் அறிவாராய்ச்சிகள் செய்யும் உண்மையை அறிந்து மேன்மை அடைந்தானு ? இல்லவே இல்லே.

அவன் செய்துகொண்ட நன்மைகள் முற்றும் தன்னேச் சுற்றிலும் உள்ள உயிரற்ற பொருள்களே ஆராய்ந்து அவைகளால்தான் இன்புற நினேத்தது ஒன்றே ஆகும். அவன் எண்ணின எண்ணங்களுக்கு மாருக அறிவற்றதும் உயிர் அற்றதுமான அஃறிணேப் பொருள்களுக்குத் தானே அடிமை ஆகி அவற்ருல் சிறைசெய்யப்பட்டு அவமதிப்பு அடைந்திருக்கிருன். ஆகவே அவன் செய்யவேண்டிய வேலே என்னவென்ருல் இவ்வாருன பயனற்றதும் அவமதிப்புக் கிடமுமான ஆராய்ச்சிகள் உண்டுபண்ணுதல்கள் இவைகளே ஒழித்துவிட்டுத் தன் உடம்பு அதன் தத்துவங்கள் அவற்றை ஆற்றுவிக்கும் சக்திகள் இவைகளே ஆராய்ச்சி செய்து அவ்வாராய்ச்சியினுல் தான் மேல் உறுவதே சரியான செயலாகும்.

இந்த வகையில் ஆராய்ச்சி மூலமாகச் சான்றுகளேக் கொண்டு தான் எடுத்துக்கொண்ட முடிவுகளே நிரூபித்து இந்நூல் ஆசிரியர் ஒரு மதிப்புக்குரிய கருத்தை வெளியிட்டிருக்கிருர். இதனுல் இவர் சொல்லுவது என்னவெனில்

இதுகாறும் மனிதன் ஆராய்ந்த செய்திகள் எல்லாம் பயனற்றவை என்றும், இனிமேல் நல்லமுறையில் ஆராய்ச்சி நடத்தவேண்டும் என்றும் அவ்வாராய்ச்சி தன்னைப் பற்றியே இருக்கவேண்டும் என்றும், அதுதான் மனிதனை மாட்சிமைபெற்ற மனிதனுக்கும் என்றும், அதுதான் இனித் தேவை என்றும் முடிவு கட்டுகிறார். ஆகவே மனிதனுக்கு இன்னும் சிறந்த அறிவு ஆராய்ச்சிவேண்டும் என்பது அவர் கருத்து. “கற்றது கைம்மண்ணளவு கல்லா துலகளவு” என்ற ஔவையார் கூற்றையே விளக்குகிறது. இனி இந்நூலாசிரியர் கூறும் சான்றுகளை மேல்கொண்டு எடுத்துக்காட்டுவோம்.

திருஞான சம்பந்தர் சிறப்பு

(புலவர். முருகவேள், B. O. L.)

முன்னுரை

திருஞான சம்பந்தர் தமிழ் நாட்டில் தோன்றியருளிய ஒப்புயர்வற்ற சான்றோர்கள் பற்பலரில் மிகவும் தலைசிறந்த ஒருவராவர். சங்க காலத்திற்குப் பின்னர்ச் சில நூற்றாண்டுகள் காறும் தமிழ் மக்களின் பண்பு நலத்திற்கு மாறாகப் புதிது புகுந்து வளர்ந்து பெருகிய விரும்புதற்குரியவல்லாத பல தீய விளைவுகளைக் கடிந்தொழித்துத், தமிழர்களாகிய நம்மனோரின் கலை நாகரிகம் பண்பாடு கொள்கை முதலிய பலவும் அழிந்துபடாமற் காத்துச் செழித்தினிது வளர்ந்தோங்கச் செய்தவர் திருஞானசம்பந்தரே. திருஞான சம்பந்தரின் தனிப்பெருந் தெய்வீக நலங்கள் ஒருபுறம் இருப்ப, வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஒரு மாபெருந் தலைவர் (A real, historical Personality) என்ற முறையில் ஆராய்ந்தால், நமது தமிழ் மொழியும் தமிழர் பண்பாடுகளும் பிறவுமெல்லாம் இடையூறின்றி இனிது வளர்ந்தோங்கிச் செழித்துச் சிறப்புறுதற் பொருட்டுப், பல்லாற்றானும் ஒல்லும் வகையெல்லாம் உழைத்துத் தொண்டாற்றிய ஒப்புயர்வற்ற பெருஞ் சான்றோர் அவர் என்பது நன்கினிது புலனாகும். எனவே, வாழையடி வாழையாக வழிவழியே

தோன்றி யருளிய தமிழகச் சான்றோர் பெருமக்களின் வரிசையில், முன்னணியில் வைத்து வழிபட்டுப் போற்றத் தகுந்த பெருமையும் உரிமையும் பெற்றுயர்ந்து திகழ்பவர் திருஞான சம்பந்தர் என்பதனைத் தமிழ்நன்மக்கள் அனைவரும் தம் கருத்திற் பதித்தல் வேண்டும்.

தமிழகத்திற் சிவபெருமானை முழுமுதற் பெரும் பொருள் எனத் தேர்ந்துணர்ந்து வழிபட்டு வாழ்ந்து வரும் சிவநெறியாளர் சூழலில், திருஞானசம்பந்தர்க்குள்ள சீரும் சிறப்பும் வேறுபிறர் எவர்க்கும் இருத்தல் இயலாது. உலகிலேயே மிகப் பெரும் பழமை வாய்ந்ததாய் நிலவி வரும் நமது அருமைச் சைவ சமயத்தின் தனிப் பெருந் தலைவராக விளங்கும் பெருமைக்குரியவர் திருஞான சம்பந்தரே எனலாம். திருஞான சம்பந்தர்க்கு முன்னரே திருமூலர் போன்ற சிவநெறிச் சான்றோர் பலர் விளங்கியிருந்தன ராயினும், சிவநெறித் தலைவராகத் திருஞானசம்பந்தரையே சிறப்புமுறையிற் கொண்டு நம் முன்னோர்கள் பலரும் போற்றி வழிபட்டு வந்திருக்கின்றனர். "சைவர் எனப்படுவோர் அனைவருக்கும், சிறப்பாகப் பார்ப்பனர் அல்லாத தமிழர்களாகிய சைவர்கள் அனைவருக்கும் திருஞான சம்பந்தப் பெருமானே தலைசிறந்த பெருந் தலைவராவார். அவர்தம் திறை மொழிகள் மறைமொழிகளினும் மிக்க மேம்பாடு உடையனவாகும்."

இக்கால அறிஞர் சிலர் ஈடுபாடு

இத்தகு பெருஞ் சிறப்புடைமைபற்றியே, தமிழ்ச் சைவச் சான்றோர்கள் பலரும் திருஞானசம்பந்தரைப் பேரன்பு கொண்டு பெரிதும் போற்றி வழிபட்டு வருகின்றனர். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெரும் புலவர் மாமணியாய் விளங்கிய சிவந்திரு. மறைமலை அடிகளார், திருஞானசம்பந்தர்பாற் கொண்டிருந்த ஈடுபாட்டுக்கு எல்லையே இல்லை. அவர்கள் தாம் ஆற்றப் புகும் ஒவ்வொரு சொற்பொழிவின் தொடக்கத்தும்,

"உறவும் பொருளும்ஒண் போகமும் கல்வியும் கல்வியுற்ற
துறவும் துறவின் பயனும் எனக்குச் சுழிந்தபுனற்
புறவும் பொழிலும் பொழில்சூழ் பொதும்பும் ததும்பவண்டின்
நறவும் பொழிஎழிற் காழியர் கோன்திரு நாமங்களே"

என நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த சிறந்த திருப்பாடலினை, மிகவும் உருக்கமாகப் பாடி வணங்குவதனை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். "மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்" என்னும் தமது பெருநூலுள்ளும், சைவ சமய ஆசிரியர்கள் நால்வர்களில் திருஞான சம்பந்தரே மிக்க சிறப்பும் தலைமையும் பெற்றவர் என்று வற்புறுத்தி, அவர்கள் நன்கினிது விளக்கியிருத்தல் காணலாம். இங்ஙனமே, சைவசித்தாந்தம் வல்ல பேரறிஞராக விளங்கியிருந்த பெருநாவலர் சிவப்பெருந்திரு. சோமசுந்தர நாயகர் அவர்களும், திருஞானசம்பந்தரையே தமது ஞானாசிரியராகக் கொண்டு வழிபட்டு வந்தமை நம்மனோர் அறிதற்குரியது. அவர்தம் நூல்களுள் "ஸ்ரீஜ்ஞானஸம்பந்தகுருப்யோ நம:" என்னும் திருமொழி யாண்டும் பொறிக்கப்பட்டிருத்தல் காணலாம். அவர்கள் வரைந்துள்ள "ஆசார்யப் பிரபாவம்" முதலிய நூல்கள், திருஞானசம்பந்தரின் சிறப்பைப் பலபடியாக விரித்துரைத்து விளக்கும் மாட்சிமை மிக்கனவாகும். இங்ஙனமே "ஞானத்தின் திருவுரு" என்னும் அரும்பெருங் கட்டுரை வரைந்த பெரும் பேராசிரியர் பண்டிதமணி அவர்களும், நாளும் இன்னிசை யாய்ந்து தமிழ்மொழி வளர்த்த அருட்டிரு. விபுலானந்த அடிகளார் அவர்களும் போன்ற எண்ணிறந்த அறிஞர் பெருமக்கள்எனைப்பலரும், திருஞானசம்பந்தரையே சிவநெறி பேணும் திருவினர் அனைவர்க்கும் உரிய அருட்பெருங்குரவராகக் கருதி வழிபட்டு ஒழுகி வந்துள்ளமை யாவரும் அறிதற்குரியது.

பண்டைச் சான்றோர் பாராட்டு

இனி, இஞ்ஞான்றை அறிஞர்கள் ஒருபுறம் இருப்ப, வடலூர் இராமலிங்க அடிகளார் போன்ற அருட்பெருஞ் சான்றோர்கள் தாமும், தமக்குரிய அரும்பெரு ஞானாசிரியராகத் திருஞானசம்பந்தப் பெருமானையே தேர்ந்து தெளிந்து கொண்டு போற்றினர் எனத் தெரிகின்றது.

"முன்புறு நிலையும் பின்புறு நிலையும்
முன்னிநின் றுளம்மயக் குறுங்கால்,
அன்புறு நெறியால் திருநேறித் தமிழ்கொண்
டையம்தீர்த் தருளிய அரசே !

என்புபெண் ணுருவாய் இன்னுயி ரதுகொண்
டெழுந்திடப் புரிந்தல கெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே!
என்னுயிர்க்கு உயிர்எனும் குருவே!"

எனப் போதரும் திருவருட்பாப் பாடல் ஒன்றே, இதனை வலியுறுத்தப் போதுவதாகும். இராமலிங்க அடிகளார் திருஞானசம்பந்தரை "என்உயிர்க்கு உயிர் எனும் குருவே" என விளித்து, என்பு பெண்ணுருவாய் இன்னுயிர்கொண்டு எழுந்திடப் புரிந்ததனையும், திருநெறித் தமிழ் கொண்டு தமக்கு ஐயம் நீத்தருளியதனையும் போற்றிப் புகழ்ந்திருத்தல் கருதியுணரற்பாலது. இம்மட்டோ!

" வருக்கைச் சுளையும் பொருக்கரை மாவும்
கொழுங்கனி வாழையும் செழுஞ்சுவைக் கனியும்
ஒருங்குதலை மயங்கிய அரும்பெருங் கலவையின்,
அருஞ்சொல் வழக்கமும் திருந்திய நடையும்
வண்ணவேற் றுமையும் தண்ணெனும் ஒழுக்கமும்
ஒன்றி நிரம்பிய குன்றாத் திருப்புகழ்,
வேறுவே றியம்பிய வீறுறு தவத்தின்
அருண கிரிஎனும் பெரியன் "

என வியந்து புகழ்ந்தோதப்படும் மாபெருங் கவிஞராகிய அருணகிரிநாதர் தாமும், திருஞானசம்பந்தர்பாற் கொண்டிருந்த சிறந்துயர்ந்த பெருங் காதற்கு எல்லையே இல்லை போலும்! முருகனைத் தவிரப் பிறிதொரு கடவுளை மறந்தும் புறந் தொழாத அருணகிரிநாதர், திருஞானசம்பந்தரை முருகனின் தோற்றம் எனவே துணிந்து கொண்டு, பலபடியாகப் பாடிப் புகழ்ந்து பரவிக் களிக்கின்றார்! எத்துணையோ பன்னூற்றுக் கணக்கான வண்ண வேற்றுமைகளைத் தண்ணெனும் ஒழுக்கமுற எளிதினிது பாடிய பெருங் கவிஞரேறாகிய அருணகிரிநாதர் தாமே,

" புமியதனிற் ப்ரபுவான புகலியில்வித் தகர்போல,
அமிர்தகவித் தொடைபாட அடிமைதனக் கருள்வாயே!"

எனப் பெரிதுமிக விழைந்துநின்று இறைஞ்சியுள்ளனராயின், திருஞானசம்பந்தரின் சிறப்பும் பெருமையும் இனையவென உணர்த்துதல் எளிதோ?

இனி, இங்ஙனமே கச்சியப்பமுனிவர் சிவஞானமுனிவர் குமரகுருபரசுவாமிகள் சிவப்பிரகாசசுவாமிகள் தாயுமான அடிகள், சேக்கிழாரடிகள், நம்பியாண்டார் நம்பிகள், பட்டினத்தடிகள் சுந்தரமூர்த்திகள் சங்கராசிரியர் முதலிய பற்பல பெருஞ் சான்றோர்களும் திருஞானசம்பந்தரை வழிபட்டுள்ளமையே யன்றி, "அப்பர்" எனத் திருஞானசம்பந்தரால் பெரிதும் மதித்துப் போற்றப் பெற்ற திருநாவுக்கரசர் பெருமானார் தாமும் கூட,

"கழுமல ஊரர்க் கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் !
ஆவடு துறைய னாரே !"

"திறக்கப் பாடிய என்னிலும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உங்நின்றார் !
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யார்இவர் பித்தரே !"

என அருளிச்செய்திருத்தலால், திருஞானசம்பந்தரின் சிறப்பினை நாம் மேலும் தெள்ளிதின் உணர்கின்றோம். திருஞானசம்பந்தர் திருப்பூந்துருத்திக்கு அருகாக எழுந்தருளி வந்து "எங்குற்றார் அப்பர்" என வினவியபோது, எவரும் அறிந்து கொள்ளா வகையிற் சிவிகை தாங்கி மகிழ்ந்து போந்து கொண்டிருந்த திருநாவுக்கரசர் "உங்காநின்று உம்அடியேன் உம்அடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு எய்தப்பெற்று இங்குற்றேன்" என விடையிறுத்தனர் எனவும், அதுகேட்ட திருஞானசம்பந்தர் பதைபதைப்புடன் விரைந்து கீழே இழிந்து "இவ்வாறு செய்தருளிற்று என்னும்?" என்று வணங்கிநிற்க, அதற்குத் திருநாவுக்கரசர் "திருஞான சம்பந்தர்க்கு வேறு எவ்வாறு செய்வது?" எனமொழிந்து மீட்டும் பணிந்து மகிழ்ந்தனர் எனவும் சேக்கிழார் பெருமான் திறம்பட விளக்கியிருத்தல், நினைத்தொறும் நினைத்தொறும் நம்மனோர் நெஞ்சமெல்லாம் உருக்கி மகிழ்விக்கின்றதன்றோ? திருஞானசம்பந்தரின் சிறப்பும் பெருமையும்தான் என்னே !

தமிழர் தலைவர்

திருஞானசம்பந்தர் இறையருள் பெற்றவர்–பசுகரணங்கள் கெட்டுப் பதிகரணங்கள் எய்தியவர் – 'எனதுரை தனதுரை' என்று கூறும் 'அப்பரிசிற் பதியானவர் !'

இம்மட்டோ! 'தலைமகனுகிநின்ற தமிழ் ஞானசம்பந்தர்' அவர்! 'பேச்சினல் உமக்கு ஆவதென்? பேதைகாள்!' என்று, செயற்கரிய பல செய்த 'செயல் வீரர்.' 'ஈனர்கட்கு எளியேனலேன் திருவாலவாய் அரன்நிற்கவே' என்றுரைத்த அஞ்சா நெஞ்சமும் ஆண்மையும் மிக்க ஞான தீரர்! "மன்னன் நீறணிந்தான் என்று மற்றவன் மதுரை வாழ்வார் துன்னிநின்றார்கள் எல்லாம் தூயநீ றணிந்து கொண்டார்." என்னும்படி ஒரு நொடிப் பொழுதிற் செய்தருளிய இணையற்றுயர்ந்த இனிய பெரும் புரட்சியாளர்!* திருஞானசம்பந்தர் நிலவுலகில் தோன்றி வாழ்ந்த பொழுது தமிழ் வேந்தர்களாய 'தென்னர் சேரர் சோழர்'களின் ஆட்சி நிலைகுலைந்து போகத், தமிழரல்லாத பல்லவர் களப்பிரர் முதலிய வேற்றரசர்களின் ஆட்சி தமிழகத்தில் தலைஎடுத்து நின்றது. அதுபொழுது வடநாட்டில் ஹர்ஷன் என்னும் பேரரசன் (கி. பி. 606 - 647) ஆண்டு வந்தான். சாளுக்கிய நாட்டில் இரண்டாம் புலிகேசி (கி. பி. 610 - 642) என்னும் மன்னன் செங்கோல் செலுத்தினன். காஞ்சிபுரத்தில் மகேந்திரவர்ம பல்லவனும் (600-630), அவனது மகனுகிய நரசிம்மவர்ம பல்லவனும் (630 - 668) அரசோச்சினர். மதுரையில் மாறவர்மன் அரிகேசரி என்னும் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் (640 - 670) அரசுகட்டில் வீற்றிருந்தான். சிறுத்தொண்டர் பம்பாய்க்கு அருகேயுள்ள வாதாபி என்னும் இடத்தில் நிகழ்ந்த போரில் (கி. பி. 642) இரண்டாம் புலிகேசியை வென்று, அந்நகரை அழித்து அங்கே வெற்றித்தூணை நாட்டினர். அதுபோது வேற்று நாட்டு மக்கள் பலர் தமிழகத்தில் பெருந் திரளாகப் புகுந்து கலந்து, தங்களது பொருந்தாத கொள்கைகள் தீய பழக்க வழக்கச் செயல்

---

* "Forms of religion are founded, not by Philosophers and theologians, with their interpretations and argumentations, but by heroic men of faith—faith in God and faith in themselves, to such an extent, that they can induce not only others but themelsves, too, to believe in the miracles they perform. The former come later on, to justify and sanction what already exists, with their elaborate exegetics, written solely for the learned and thoughtful—not to say the sceptical."

—பேராசிரியர். சுந்தரம்பிள்ளை, M.A.

கள் முதலியவற்றைத் தமிழ் மக்களிடையே இனித்துப் பரப்பி வந்தார்கள். தமிழ்ச் சங்ககாலநிலே மாறியொழிந்து, தமிழும் தமிழரும் எல்லாத் துறையிலும் இழிநிலை எய்தி மிக வும் இடர்ப்பட நேர்ந்தது. இந்நிலையில் மாபெரும் தமிழியக்கம் ஒன்றைத் தொடங்கிப் 'பற்பல ஆயிரம் தொண்டரோடும்', அதனை நன்கினிது நடாத்தித் தமிழக மக்கள் அனைவரையும் விழிப்பூட்டிப் பாதுகாத்து நலம்செய் யும் தலைவராக முற்போந்து பலவகையிலும் திருஞானசம் பந்தர் பணியாற்றினர். 'பலவேறு கொள்கைகளாலும் பிரிந்து சிதர்ந்து கிடக்கும் ஒரு நாட்டின் மக்களை, அவர்கள் பேசும் மொழியின் வாயிலாகத்தான் ஒன்றுபடுத்த இய லும்' என்னும் உண்மையினை நுண்ணிதின் உணர்ந்து கடைப்பிடித்துத் தமிழ் மக்களினிடையில் தமிழ்மொழி யுணர்ச்சியை முதன் முதலாக வற்புறுத்தியவர் திருஞான சம்பந்தர் என்றால் மிகையாகாது. 'தமிழன்' என்னும் சொல் லினை முதன் முதற் புதிது படைத்துத் தமது பாடலில் வழங் கியவர் திருநாவுக்கரசர் எனின், தம்மைத் 'தமிழன்' என்று முதன் முதற் பெருமிதத்துடன் குறிப்பிட்டுக்கொண்டு மகிழ்ந்தவர் நமது திருஞானசம்பந்தரே எனத் துணிந்து கூற லாம். "தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!" என்பன போலும் உணர்ச்சிகளை, இற்றைக்குப் பல நூற் றாண்டுகட்கு முன்னரே எழுப்பிய பெருமை திருஞானசம் பந்தரையே சாரும். தமிழ் மொழிக்கே ஒரு பெரும் கலங் கரை விளக்கம்போல இன்றளவும் நின்று நிலவி எழிலுற விளங்கித் திகழ்ந்து வரும் அரிய பெரிய இலக்கண நூலை எத்துணையோ ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே இயற்றி யளித்த ஆசிரியர் தொல்காப்பியரும், அவரை அடுத்துத் தோன்றி அவர்தம் நெறியினையே பின்பற்றி உலகமுழுதும் ஒருங்கே புகழும் ஒப்புயர்வற்ற நீதிநூலாகிய திருக்குறளை அருளிச் செய்த தெய்வப் புலவர் திருவள்ளுவரும், வேறுபிற சான்றோர்கள் எவரும் தம்மைத் 'தமிழ்த் தொல்காப்பியன்' 'தமிழ்த் திருவள்ளுவன்' 'தமிழ் இளங்கோ' என்று குறிப் பிட்டுக் கொண்டு பெருமிதம் பாராட்டி மகிழ்ந்தின்புறுதலை அவர்தம் நூல்களுள் நாம் யாண்டும் காண்கின்றிலம். மற்று நம் அருமைத் திருஞானசம்பந்தர் ஒருவர் மட்டுமே இங்ங னம் கூறி மகிழ்ந்து கொள்ளுகின்றார்! இவ்வருமைப் பாட்

டினை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் எல்லையில்லாத ஒருவகை இன்ப உணர்ச்சி நம்மனோர்க் கெல்லாம் பெருக் கெடுத் தூறிப் பொங்கி நிற்கின்றது! "பெருகிய தமிழ் விரகன்" எனத் தம்மைப் பலவிடத்தும் சுட்டிக் கொள்ளுதலால், அவர்தம் தமிழார்வம் இனைத்தென் றுணரப்படும். இங்ஙனம் 'தமிழ்' 'தமிழ்' என்று தமிழையே உயிர்ப்பாகக் கொண்டு நின்ற வேறொருவரைத் திருஞானசம்பந்தர்க்கு முன்னராயினும் பின்னராயினும் நாம் காண்டல் அரிது. தமிழ்மொழியன்பு ஆர்வம் பற்று என்பனவற்றிற் கெல்லாம் எடுத்துக் காட்டாதற் குரியாருள், திருஞானசம்பந்தரினும் சிறந்தோர் வேறு பிறர் எவரும் இலர்.

முடிப்புரை

'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்லவும்' 'தாவில் சராசரங்கள் எல்லாம் சிவம் பெருகவும்' திருஞானசம்பந்தர் பெரிதும் பாடுபட்டார். தமிழ் நாட்டின் மூலைமுடுக்கர் எங்கணும் சென்று, தமிழ் மொழிப் பற்றும் உணர்ச்சியும் மக்களுக்கெல்லாம் உண்டாகும் வண்ணம் 'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பினர்!' சங்க காலத்தில் வழங்காத புதிய புதிய கவிதை வகைகளைப் படைத்துப் பாடி, நாட்டு மக்களுக்குச் சீரிய கொள்கைகளை நலமுற விளக்கினர்.

" கல்லூர்ப் பெருமணம் வேண்டா ! கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் ஆய்த்தில !
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர் !
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே !"

எனப் போதரும் அவர்தம் இறுதித் திருப்பதிகத்தின் முதற் பாடல், அவர் எத்துணைப் பொறுப்புணர்ச்சி மிக்க சிறந்த பெருந்தலைவர் (Responsible Leader) என்பதனை நன்கினிது தெளிவிக்கும் சீரிய சான்றாகற் பாலதாகும். மாற்றார் கொள்கைகளை அறிவருளாண்மைகளோடு மறுத்துரைத்துத் தமது கொள்கைகளைப் பரப்பும் திறனில், திருஞானசம்பந்தர்க்கு இணையாவர் எவருமிலர். வேற்றுவர்கள் தமிழர்க்குத் தீங்கு விளையுமாறு பேசிப் பரப்பிவந்த பிழைபட்ட கருத்துக்களை 'மிண்டர் மிண்டாய்ப் பேசிய

பேச்சு மெய்யல்ல' என்றுணர்த்தி மக்களிடையே விழிப் புணர்ச்சி நிகழ்த்திய அவரைப்போல, ஆற்றல் சான்ற சிறந்த தோர் அரும் பெரும் பரப்புரையாளரை (A great Powerful Propagandist) நாம் எங்கணுமே காண்டல் இயலாது. பழங்காலத்திற் பள்ளிகளாகவும், கலைஞர்களின் கழகங்க ளாகவும், அறங்கூறும் அவையங்களாகவும், மருத்துவ மனைகளாகவும், புத்தக நிலையங்களாகவும், பேணுநர் இல் லோர்க்கு ஊணுடை நல்கி ஓம்பும் புகலிடங்களாகவும், மக்கட்குத் தொழில்தரும் நிறுவனங்களாகவும், வறியவர்க் குப் பொருள் கொடுத்து வாங்கி உதவும் எய்ப்பில் வைப்புக் களாகவும், மன்பதை நலங்காக்கும் மன்றங்களாகவும், போர்க் காலங்களில் படை வீடுகளாகவும் இன்ன பிற வாகவும் இலங்கி, இற்றை ஞான்றளவும் தமிழர் நாகரிகத் தின் உயிர்நிலைக்களனாகி ஒளிர்ந்து வரும் எண்ணிறந்த பல பெருங் கோயில்கள் தோன்றுதற்குக் காரணராக விளங்கி யவர்களுள், திருஞானசம்பந்தர் சிறப்பிடம் பெறுதற்குரி யவர் எனின், அவர்தம் சிறப்பினை விளக்க வேறு பிறிது கூறுதலும் வேண்டுமோ ?

திருஞான சம்பந்தர் சீரும் சிறப்பும்,
ஒருநாவாற் கூறுதற்கொல் லுங்கொல்?—பெருமானர்
மற்றவரே, செந்தமிழர் மாண்பனைத்தும் காத்தளித்த
நற்றலைவர் என்றுணர்க நன்கு! —முருகவேள்

சமயத் தெளிவு

(இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, இராசபாளையம்)

தமிழ்நாட்டு உருவ வணக்கம் கந்தழி வணக்கமாகத் தொடங்கியது ; பிறநாடுகளிலும் உருவ வணக்கமே பெரும் பாலும் பரவியிருந்தது. பௌத்தம், சமணம் இரண்டிலும் உருவ வழிபாட்டிற்கு நியாயமில்லை என்றாலும், அவற்றி லும் அஃதிருக்கக் காண்கிறோம். யூதம், கிறிஸ்துவம், மகம் மதியம் அருவ வழிபாட்டைப் போற்றுவன. கன்பூசியன், சின்டோ சமயங்கள் இரண்டும் தனி ஒழுக்கச் சமயங்கள். மற்றவை, ஒழுக்கச் செம்மையைப் பேணும் கடவுட் சமயங் கள். சமணமும் தென்னாட்டுச் சைவமும், வடநாட்டு

வைணவமும் ஊனுணவை விலக்குவன் ; மற்றவற்றில் அவ் விலக்கில்லை.

இந்து மதம், ஒரு தனிச் சமயமல்ல : உலகம் தோன்றிய காலமுதல், நம் இந்தியாவில் தோன்றிய பல சமயத் திரட்டு. அதில் புதியன புகுதலுண்டு; பழையன கழிதலில்லை. அதனால் முரண்பாட்டிற்கும் அளவில்லை. கடவுள் உண்மைபேசாத சாங்கியமே,மற்றை இந்துமதப்பிரிவுகளின் தத்துவ விளக்கத்திற்கெல்லாம் அடிப்படை. என்றாலும், அவற்றிலெல்லாம் கடவுளுண்டு. இந்து வெளியாசார அனுட்டானங்களைக் கைக்கொள்ளும் நாத்திகனும் இந்துதான்.

வடக்கத்திய வேதாகமச் சமயங்களும் தென்னாட்டுத் தமிழன் தெய்வ வழிபாடுகளும் கலந்து சைவ வைணவமாயின. அவை முறையே சமணப் பௌத்தக் கருத்துக்கள் சிலவற்றைத் தமதாக்கி நம் நாட்டில் பௌத்தத்தையொழித்தும் சமணத்தின் செல்வாக்கைக் குறைத்தும் விட்டன. இந்துமத வரலாறு இவ்வாறாக, இன்றும் இந்துமதச் சமயங்களுக்குள் வேற்றுமைகள் பல இருக்கின்றன.

இப்போது இந்து மதம் பொதுவாக, சுமார்த்தம் (பிரச்சன்ன பௌத்தம்), சைவம், வைணவம், மாத்துவம் எனும் நான்கு பெரும் பிரிவுகளை உடையதாகும். சுமார்த்தமும் சைவமும் சிவனைப் பரம்பொருளாகக் கொண்டன ; வைணவமும் மாத்துவமும் விட்டுணுவைப் பரம்பொருளாகக் கொண்டன. சுமார்த்தம் சிவபிரானைப் பரம்பொருளாகக் கொள்ளினும் வடமொழிச் செருக்கும் வைணவ ஆசார அனுட்டானமும் ஆகமத் தமிழ்ப் பழிப்பும் மிகுந்தது. சைவம் சிவனைப் பரம்பொருளாகக் கொள்வதோடு விட்டுணுவைச் சிவசக்தியாகவும் அச்சக்தியின் துணைகொண்டே அவனருளுவன் எனவும் போதிப்பது. மாத்துவம் விட்டுணுவைப் பரம்பொருளாகக் கொள்ளினும், பொருள் இரண்டு-கடவுள் வேறு, நாம் வேறு எனப்புகல்வது. சைவமும் வைணவமும் கடவுளும் நாமும் இரண்டு பொருள்களாக இருப்பினும், தன்மையால் ஒரே பொருள் எனப் புகல்வன. சுமார்த்தம் பொருள் ஒன்றே ; நாமெல்லாம் கடவுளின் பிரதி பிம்பங்கள் கடவுளேயெனும்.

சைவ நெறியை இடைக்கால தீட்சை நெறி—சரியை, கிரியை, யோகம், ஞானநெறியெனவும் முற்காலத் திருமூலர்

அன்புநெறியெனவும் பிரிக்கலாம் ; என்றாலும், நடைமுறையில் அப்படிப் பிரிந்தில்லை. தீட்சைநெறி பேணுவார் பேணட்டும் ; அது ஒரு சிலர்க்கே பொருந்தும், தற்காலம் வேண்டுவது—எங்கும் பரவவேண்டுவது, பிறர் நலமும் பேணும் திருமூலர் அன்புநெறிச் சைவமேயாம்.

சைவத் திருமுறைகளில், சில முரணான கருத்துக்களும் காணக்கூடும். பல நூற்றாண்டுகளுக்குமுன், பலவேறு பண்பாட்டோடு கூடிய வெவ்வேறு காலத்தவர்கள் செய்தருளிய நூல்களில் தற்காலப் போக்கிற்கேற்காத கருத்துக்கள் காணப்படுதலில் நாம் வெறுத்தற்கேனும் வியத்தற்கேனுமில்லை. அவையாவும் அன்புநெறி-அருள்நெறி வளர்ப்பனவாகவும் மற்றும் பிறசமய நூல்களுக்குப் பலவகையிலும் மேம்பட்டனவாகவும் இருக்கின்றன.

உலகினுக்கே வள்ளுவன் தந்துள்ள திருக்குறளும், பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதன் தந்துள்ள சிவஞானபோதமும் இருக்க அவற்றிற்கு முரணும் திருமுறைக் கருத்துக்களை விலக்கி, அவற்றிற்கு அரண்செய்வனவற்றை யெல்லாம் நாம் கொள்ளற்கும் தடையுண்டோ ?

சிவன், சில பிறசமயக் கடவுளர்போன்று மூவான், பிறவான், இறவான், அவன் தாயுமானவன், அம்மையப்பன் ; ஞானமூர்த்தி ; கற்பகக்கனி ; கருணைப்பெருங்கடல் ; மெய்யர் மெய்யன் ; நம்மிலும் நமக்கினியன் ; தன்னை வைவாரையும் வாழவைப்பான். ஆனால், பிறரைப் பேணாதாரைப் பேணான் என்றால் நாம் அவனைப் பின்பற்றல்கூடாதா? நாம் அன்பர்பணி செய்யச் செய்ய, நமக்கு இன்பநிலை தானேவந் தெய்தாதா ?

நாம் என்றும், எங்கும், எவரிடத்தும் அன்பு பெருக வாழ்வதே-நன்மையாம் உண்மையும், தீதொரீஇ நன்றின் பாலுய்க்கும் அறிவும், இறவா இன்ப அன்பும் திரண்டு உண்மை யறிவின்ப(சச்சித்தானந்த)மாக விளங்கும் சிவமாவதென்றால், அவ்வாழ்வை வாழாதிருத்தலும் மதியாகுமா ? நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயிற் படமாடக் கோயில் பகவற்கதாம்.

மேன்மையாம் சைவ நன்னெறி பரவுக உலகமெங்கும்.

——

புத்த சமயமும் சைவமும்

(அழகுமதியன்)

புத்த சமயம் தோன்றி 2500 ஆண்டுகள் ஆயின. அதனை நமது பாரத நாட்டில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். அப்போது புத்த சமயத்தைப்பற்றி இந்திய அரசியலார் ஒரு பெரிய ஆங்கில நூல் வெளியிட்டிருக்கிறார்கள். 2500 ஆண்டுகளாகப் புத்த சமயம் வளர்ந்து வந்த வரலாற்றை அந்நூல் எடுத்துக் கூறுகின்றது. அந்நூல் 500 பக்கங்கள் கொண்டது. அழகிய படங்களும் சித்திரங்களும் அதில் சேர்க்கப்பட்டுள்ளன. சமயக் கோட்பாடுகள், சமயாச்சாரியனின் வரலாறு, சமயப் பிரிவினைகள், சமய நூல்கள், சமயம் பரவின நாடுகள், அங்கே நடந்த சமயப் பிரச்சாரங்கள் முதலிய பலபல செய்திகளும் அதில் அடங்கியுள்ளன. புத்த சமயம் இந்தியாவில் தோன்றி அசோகர் நாளில் இந்தியா முழுவதும் பரவின செய்தியும், வெளிநாடுகளான இலங்கை, திபேத்து, சீனு, ஜப்பான், கிழக்கு இந்திய நாடுகள், தீவுகள் இவைகளில் பரவின செய்திகளும், ஆங்காங்கே எழுதப்பட்ட நூல்கள் கூறும் செய்திகளும், விவரமாகக் கூறப்பட்டுள்ளன. பாலிமொழி, வடமொழி, சினமொழி, திபேத்து மொழி முதலிய மொழிகளில் காணும் நூல்களையும் கூறுகின்றன. இந்தியாவில் பல மாகாணங்களில் காணும் சின்னங்கள், சிற்பங்கள் ஓவியங்கள், கோயில்கள் இவைகளைப்பற்றியும் விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

ஆனல் என்ன காரணமோ தெரியவில்லை. தென்னிந்தியாவைப்பற்றிய செய்திகள் மிகக்குறைவாகக்கூறப்பட்டுள்ளன. இடங்களில் நாகப்பட்டினம், காஞ்சி என்ற இரண்டு பெயர்களும், தமிழ் நூல்களில் மணிமேகலை ஒன்றுமே குறிக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய செய்திகள் ஒன்றும் கூறப்படவில்லை. தமிழ்மொழியில் உள்ள செய்திகள் வடநாட்டுத் தலைநகருக்கு எட்டுவதே இல்லை என்று கூறலாமா? தமிழ் நாட்டு அறிஞர்கள் அவைகளைக் குறிப்பிடுவதில்லையா, அல்லது வடநாட்டார் இச்செய்திகளைத் தள்ளிவிடுகிறார்களா? எது உண்மையோ? எதுவானலும் சரி. ஒன்றிரண்டு குறிப்புக்களை ஈண்டு எழுதுவோம்.

இடங்களிலே நாகபட்டினத்து விகாரை ஒன்றேயன்றிக் காஞ்சியில் சில புத்த வடிவங்கள் கிடைத்திருக்கின்றன. அங்குப் பல வடிவங்கள் புதைக்கப்பட்டுப் போயின. அவைகளைத் தோண்டி எடுக்கவேண்டும். ஏகாம்பரநாதர் கோயிலில் சுற்றுமதிலில் பல புத்த வடிவங்கள் கட்டப்பட்டுள்ளன. மகா நிர்வாணம் காட்டும் சில. சிற்பங்களும் அதில் உள்ளன.

காரைக்காலுக்கருகில் போதி மங்கை என்ற ஊர் இருந்தது. இதில் பௌத்தர்கள் சம்பந்தரை எதிர்த்தார்கள் என்ற செய்தியைப் பெரிய புராணம் கூறுகின்றது.

தில்லைச் சிதம்பரத்தில் மாணிக்கவாசகருடன் புத்தர்கள் வாதாடின செய்தியை அவரது வரலாறு கூறுகின்றது. நூல்களில் மணிமேகலை ஒரு சிறந்த பௌத்த நூல் - அதனை எழுதிய கூலவாணிகன் சாத்தனுர் ஒரு பௌத்தர். கதாநாயகி மணிமேகலை ஒரு பௌத்தப் பெண். அவளுக்கு உபதேசித்த அறவண அடிகள் (தர்ம பாலர்) காஞ்சியில் இருந்த ஒரு துறவி. அந்நாளில் காஞ்சியில் கணக்கற்ற பௌத்தப் பள்ளிகள் இருந்தன. புத்தபீடிகையும் இருந்ததென்று மணிமேகலை நூல் கூறுகிறது.

பெரிய புராணத்தில் கூறப்படும் 63 நாயன்மார்களில் சாக்கிய நாயனுர் பௌத்த வடிவத்தில் இருந்த அடியார். அவர் வழிபட்ட கோயிலும் காஞ்சியில் இன்னமும் இருக்கிறது.

தமிழ் நூல்களில் வீரசோழன் காலத்தில் புத்த மித்திரர் எழுதிய வீரசோழியம் என்ற இலக்கண நூல் அநேக பௌத்தப் பாடல்களை உதாரணங்களாகக் கூறுகின்றது. மருத்துவ நூல்களில் தேரையர் நூல் ஒரு பௌத்த நூலாகும்.

இந்த வகையில் உள்ள பௌத்தச் செய்திகளை மேலே சொன்ன நூல் குறிப்பிடவில்லை என்று கூறலாம்.

இந்த முறையில் 15 நூற்றுண்டுகளுக்கு முன்னமே தமிழ் நாட்டிலும் பரவியிருந்த புத்த சமயம் எப்படிக் குன்றிப் போய்விட்டது என்ற ஒரு கேள்வி எழும்புகிறது. இந்நூல் வடநாட்டில் எவ்வாறு அச்சமயம் மறைந்து விட்டது என்று எழுதியிருக்கிறது. முந்திய இந்து சமயங்களில் உயிர்ப் பலி கொடுத்தல் முதலிய குறைபாடுகள் இருந்தன.

புத்த சமயம் தோன்றினதினல் அக்குறைபாடுகள் நீங்கின. ஆகவே மக்கள் குறை நீங்கின பழைய சமயத்தையே மீண்டும் தழுவினர்கள். புதுசமயத்தை சங்கரர் முதலிய ஆசாரியர்கள் எதிர்த்துப் போராடினர்கள் என்று அந்நூல் கூறுகிறது. இந்த வகையில் வடநாட்டில் புத்தசமயம் குறைந்து விட்டதாகக் காண்கிறோம். இவ்வாறு காரணம் காட்டியதில் சங்கராசாரியர் சைவ ஆசாரியராக அந்நூல் கூறுகிறது. இவ்விதத் தவறுகளை அந்நூலாசிரியர்கள் அறியாமல் இருக்கிறார்கள். அவர் அத்வைத ஆசிரியர் என்றும் சைவத்திற்கும் அத்வைதத்திற்கும் மிகுந்த வேறுபாடுகள் உண்டென்றும் அவர்கள் உணரவில்லை.

இனி தென் நாட்டில் புத்த சமயம் அழிந்ததற்கு வேறு காரணங்கள் உண்டு. புத்த சமயத்திற்குச் சைவ வைணவ எதிர்ப்புக்களைக் காட்டிலும் சமண எதிர்ப்பே அதிகமாக இருந்தது. நீலகேசி என்ற நூலை ஆராய்ந்தால் அக்காலத்தில் சமணமே புத்த சமயத்திற்குக் கூற்றுவனாக வந்ததென அறியலாம். ஆகவே தென் நாட்டில் புத்த சமயத்தைச் சமணர்கள் எதிர்க்க அச் சமயம் குறைந்துகொண்டு வருங் காலத்தில் அவர்களோடு சைவ வைணவர்களும் எதிர்த்தனர். சைவத்தில் சம்பந்தரும் மாணிக்கவாசகரும் எதிர்க்க வைணவத்தில் திருமங்கையாழ்வார் அதனை மிகவும் எதிர்த்தனர். நாகப்பட்டினத்தில் இருந்த விகாரத்தில் கண்ட புத்தவுருவத்தை அவரே உருக்கி வைணவர்க்கு அறம் செய்ததாகக் கண்டிருக்கிறது. இந்த வகையில் புத்த சமயம் வரவரக் குறைந்து போய்விட்டது.

இந்து மாணவர்கள் எவரும் அறியவேண்டுவன

எங்கள் அன்பிற்குரிய இந்து மாணவச் செல்வரீர்!

நீங்கள் எல்லா வகையிலும் சிறந்த பெருவாழ்வு வாழ வேண்டும். அதற்காக நீங்கள் இப்போதிருந்தே பல தகுதிகளைத் தேடிக்கொள்ளவேண்டும். அவைகளில் ஒன்று, நம் புண்ணிய நாட்டின் ஆன்றோர் பலரது அருமையான வர

லாறுகளையும் உபதேசங்களையும் அறிந்துகொள்வதாகும். அவைகளை விவரமாக அறிந்துகொள்வதற்கு ஆவலை உண்டாக்குதற்காக, அவர்களிற் சிலரைப்பற்றி அடியிற் குறிப்பிடுகின்றோம்.

1. மூன்று வயதில் ஞானப்பால் உண்டு, தெய்வத்தின் இருப்பை உலகத்தில் நிலைநாட்டிய திருஞானசம்பந்தர்.

2. "சொற்கு உறுதி அப்பர் எனச்சொல்" என்று பாராட்டப்பெற்ற திருநாவுக்கரசர்.

3. இறைவனிடம் தோழமை பாராட்டிய சுந்தரர்.

4. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்று உலகம் போற்றும் வாசகத்தேனை நமக்கு வழங்கிய மாணிக்கவாசகர்.

5. பெரிய புராணம் என்னும் தெய்வீகக் காவியத்தைப் பாடித் திருத்தொண்டர் பெருமையை விளக்கிய தெய்வச் சேக்கிழார்.

6. மூன்று வயதிலேயே ஞானோபதேசம் பெற்றுத் துறவுபூண்டு, சிவஞானபோதம் என்னும் சிறிய பெரிய சைவ சாத்திரத்தை அருளிய மெய்கண்ட தேவர்.

7. அவர் ஞான பரம்பரையில் வந்த (i) அருணந்தி சிவாசாரியார், (ii) மறைஞான சம்பந்தர், (iii) உமாபதி சிவாசாரியர்.

8. "ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு, உயர் செல்வம் எல்லாம் அன்றென்றிரு, பசித்தோர் முகம்பார்" என்றெல்லாம் நமக்கு வற்புறுத்தி உபதேசம் பல கூறியுள்ள பட்டினத்துப் பிள்ளையார்.

9. "கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க" வேண்டும் என்று பெரிதும் விரும்பிய சமரசச் சிவஞானி தாயுமானர்.

10. முருகன் அருளால், திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரநுபூதி என்னும் அற்புத நூல்களை அளித்து, "வாக்கிற்கு அருணகிரி" என்று புலவராற் பாராட்டப்பெற்ற அருணகிரிநாதர்.

11. ஐந்து பிராயமளவும் பேசுந்திறன் அற்றவராயிருந்து, செந்திலாண்டவன் திருநோக்கால் பேசத்தொடங்கியதும், "கந்தர் கலிவெண்பா" என்னும் அழகிய நூலைப் பாடி, பின்பு காசியில் சைவத்தை நிலைநாட்டிய முனிவராகிய குமரகுருபரர்.

12. அங்கயற்கண் அம்மை அருளைப் பெற்று, திருப் போரூர் முருகன் ஆலயத்தை மீண்டும் புதுப்பித்த கவி வாணர் சிதம்பர சுவாமிகள்.

13. "கருணையும் சிவமுமே பொருள்," "கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக" என்று கட்டுரைத்துச் சமரச சன்மார்க்க சங்கத்தை நிறுவிய ஜீவகாருண்ணிய சித்தர் வடலூர் இராமலிங்க சுவாமிகள்.

14. முதிர்ந்த வயதில் கால் எலும்பு முறிந்தும், முருகன் அருளால் அதிசயமாய் அது கூடப்பெற்ற பெருந்தவசியாகிய பாம்பன் சுவாமிகள்.

15. அரிய பல உண்மைகளை இனிமையாய் விளக்கி, காளமேகம் பொழிவதுபோன்று, மணிக்கணக்காகப் பேசும் சொல்வன்மை பெற்றிருந்த அருளாளர் ஞானியார் சுவாமிகள்.

16. சைவப் பெண்ணுலகில் மூன்று சுடர்மணிகளாய் விளங்கும் (i) காரைக்கால் அம்மையார், (ii) திலகவதியார், (iii) மங்கையர்க்கரசியார்.

17. திருமாலிடம் பேரன்பு பூண்டு பூசித்து அவரோடு ஒன்றுபட்ட ஆண்டாள், பிற ஆழ்வார்கள் என்னும் வைணவப் பெரியார்கள் நம் நாலாயிர திவ்யப்பிரபந்த ஆசிரியர்கள்.

18. எந்நாட்டவரும் போற்றும் உலகப் பொதுமறையாம் தனிச்சிறப்புடைய திருக்குறளை அருளிச்செய்த திருவள்ளுவர்.

19. சிறுவர் முதல் பெரியவர்கள் வரையில் யாவரும் படித்துப் பயன்பெறுதற்கு உரிய பல நூல்களை அருளிச் செய்த நம் ஞானப் பாட்டியாராகிய ஔவையார்.

20. சமய உலகில் தலைமை வகிக்க நம் தாய் நாட்டிற்கே சிறப்புரிமை உண்டென்று மேல்நாட்டில் நிலைநாட்டிய ஞான்வீரர் சுவாமி விவேகானந்தர்.

அருமை மாணவச் செல்வங்களே !

"பெரியாரைத் துணைக்கொள்", "பேதைமை அகற்று" என்று நம் ஔவைப் பிராட்டியார் நமக்குப் பணித்துள்ளார். மேற்குறித்த உண்மைப் பெரியார்களின் சரித்திரங்களை, உங்கள் வீடுகளிலோ, பள்ளிகளிலோ, கோயில்களிலோ, சமய சங்கங்களிலோ கேட்டு அறிந்து பய

னடைய ஆவல்கொள்ளுங்கள். இன்னும் பல பெரியார்களின் பெருமைகளையும் தொடர்ந்து தெரிந்துகொள்ளுங்கள். நல்லோர் காட்டிய வழியில் நடக்கத் தொடங்குங்கள். நீங்களும் மேன்மக்களாவீர்கள். உங்களால் நமது புனித பாரதத் திருநாட்டின் பெருமையும் ஓங்கும்.

இந்த நன்மைகளெல்லாம் பெருக ஆண்டவன் அருள் புரிவானாக.

அடியார் மன்றத்தினோம்.

குறிப்பு :—(1) அடியார் மன்றத்தினர் நாள்தோறும் பிடியரிசியும், வாரத்தில் ஒருநாள் தம்மால் எளிதில் செலுத்தக்கூடிய சமயக் காணிக்கையும் தரவேண்டும் என்று உறுதிகொண்டுள்ளனர். உண்டியில் சேர்ந்த சமயக் காணிக்கையைக்கொண்டு, இந்த இலவசப் பிரசுரம் வெளியிடப்படுகின்றது.

(2) அன்பர்கள் இனியும் சேர்த்துத்தரும் சமயக் காணிக்கையைக் கொண்டு, மேலும் பல துண்டுப் பிரசுரங்கள் வெளியிடவேண்டும் என்று அடியார் மன்றம் விரும்புகிறது.

சிவஞானபோதத் தெளிபொருட் சுருக்கம்

பேராசிரியர் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்

(முற்றொடர்ச்சி: மலர் 29 ; இதழ் 9 ; பக்கம் 423.)

" விளம்பிய உள்ளத்து, மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந்து அறியா; ஆங்குஅவை போலத்
தாம்தம் உணர்வின் தமிஅருள்,
காந்தம் கண்ட பசாசத்து அவையே !"

மேலை நூற்பாக்களிற் கூறிப்போந்த உயிரினல், மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பொறிகளும் பிறவும், தத்தம் நுகர் பொருள்களை 'இஃது இன்னது' என்று அளவிட்டு அறியும் ; அறிந்தும், அங்ஙனம் அறிந்த தம்மையும், தம்மை ஊர்ந்து நின்று செலுத்தும் உயிரையும், அப்பொறி புலன் கரணங்கள் அறியமாட்டா. அதுபோலவே உயிர்களும் தமது அறிவிற்குத் துணையாகிய முதல்வனது சிற்

சத்தியாகிய திருவருளால் இருவகை ஐந்தவத்தையினின்று வினைப்பயன்களை அறிந்து நுகரும்; நுகர்ந்தும், அங்ஙனம் அறிந்து நுகரும் தம்மையும், தம்மைச் செலுத்திநிற்கும் முதல்வனது திருவருளையும் அறியமாட்டா. காந்தத்தின் முன்னிலையில் இரும்பு ஈர்ப்புண்ணுமாறுபோல, முதல்வனின் முன்னிலையில் உயிர்கள் வினைப்பயன்களை உணர்ந்து நுகர்ந்துவரும். முதல்வன் கருவிகளானன்றிக் கருத்தால் மட்டுமே உயிர்களைச் செலுத்தி நிற்பானாதலின், அதுபற்றி முதல்வன் திரிபுடையனாதல் இல்லை என்பது இச்சூத்திரத்தின் உட்பொருளாகும்.

மேலை நான்காம் சூத்திரத்துள், ஆன்மா அந்தக்கரணங்களோடு கூடி அமைச்சரும் அரசனும்போல நின்று ஐந்தவத்தைகளை எய்தும் என்பது விளக்கப்பட்டது. எனவே, ஐந்தவத்தைகளை எய்துங்கால் ஆன்மாவிற்கு அந்தக்கரணங்களின் உதவியே சாலும், இறைவனின் துணை வேண்டுவதன்று போலும் என ஓர் ஐயுறவு நிகழ்தல்கூடும். அதனை நீக்கி, இறைவனது உதவியின் இன்றியமையாமையினை நுதலுதல் இச்சூத்திரத்தின் நோக்கமாகும். நிறுத்தமுறையால் இச்சூத்திரம் பாச இலக்கணம் கூறுகின்றது.

ஐம்பொறிகள் ஆன்மாவின் துணையினாலேயே பொருள்களை உணர்ந்து வருகின்றன. ஆனால், சாங்கியர்கள், ஆன்மாவானது தாமரை இலையின் நீர்போற் பற்றற்று நிற்ப, ஆன்மாவின் முன்னிலையிற் புத்தி தத்துவமே ஐம்பொறிகளின் வழியாகப் பொருள்களை உணர்ந்து நுகர்ந்துவரும் என்னும் கருத்துடையராதலின், ஆன்மா அந்தக்கரணங்களோடு கூடி அவத்தைப்படும் என்பது எவ்வாறு பொருந்தும்? என வினவுவர். ஆன்மாவானது ஐம்பொறிகளோடும் ஏனைக் கருவிகளோடும் ஒற்றுமைப்பட்டு நின்றாலன்றி, அப்பொறி புலன் கரணங்கள் எல்லாம் ஒரு பொருளையும் அறிந்து நுகரும் வன்மையுடையனவல்ல. அரசன் அத்தாணி மண்டபத்தில் வைகித் தன்கீழ்ப் பணிசெய்வோரை அவரவர்க்குரிய பணிகளிற் செலுத்தி ஆளுமாறுபோல, ஆன்மாவானது ஐம்பொறிகளை அவ்வவற்றிற் குரிய பொருள்களிற் செலுத்தி ஆட்சிசெய்து, புருவ நடுவின்கண் நிற்கும். அரசனால் ஏவப்பட்டோர் ஏவிய தொழிலைமட்டுமேயன்றி அதனினூங்குச் செல்ல மாட்டாமைபோல,

ஐம்பொறிகளும் எனைப் பிற கருவிகளும் உயிரானது தம்மைச் செலுத்தத் தமக்குப் புலனாகும் பொருள்களையறிந்து நுகர்வதோடமைவதேயன்றி, அதனினாங்குச் சென்று தம்மை உடன் நின்று செலுத்தும் உயிரை அறியமாட்டா. ஆயினும், ஒரு தொழில் செய்தற்கண் அரசனும் அமைச்சர் முதலாயினாரும் தம்முள் இன்றியமையாதவாறுபோல, ஒரு பொருளை உணர்ந்து நுகர்தற்கண் உயிரும் பொறிகளும் தம்முள் இன்றியமையாதனவாகும். ஆதலால், உயிரானது தாமரை இலையின் நீர்போற் பற்றற்று நிற்பப் புத்தி தத்துவமே ஐம்பொறி வழியாகப் பொருள்களை யுணரும் என்றல் அமையாது. புத்தி தத்துவமும் ஒருவகைக் கருவியே யாகலானும், கருவிகளின் தொழிற்பாடு ஆன்மாவின் அறிவிச்சை தொழில்களுக்கு ஏற்பவே நிகழுமாதலானும், பொருள்களைப் பொறிகளுக்கு அறிவித்துத் தானும் உடனாய் நின்று அறிவது உயிரே என உணர்க.

ஐம்பொறியை ஆண்டு,அங்கு அரசாய் உளம்நிற்ப,
ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம்!—ஐம்பொறியிற்
காணாதேற், காணாது காணும்உளம்; காணாதேல்,
காணாகண்; கேளா செவி !

இனி, புத்தி தத்துவமும் ஐம்பொறி முதலிய கருவிகளும் அறிவில் சடமாகலின், அவற்றிற்குப் பொருள்களை உணர்ந்து நுகர்தற்கண் உயிரின்துணை இன்றியமையாது என்பதமையும். ஆனால் உயிரானது அறிவுடைய சித்துப் பொருளாதலின், அதற்கு வினைப்பயன்களை நுகர்தற்கண் முதல்வனின் துணை வேண்டப்படுவது எற்றுக்கு? என ஈசுர அவிகாரவாதிகள் முதலியோர் வினவுவர். ஐம்பொறிகளுக்கு ஆன்மாவின் துணை இன்றியமையாதவாறு போலவே, உயிர்கட்கும் முதல்வனின் துணை இன்றியமையாது ஒருதலையாக வேண்டப்படும். ஐம்பொறிகள் சடமாதலான் 'ஆன்மா ஒற்றித்துக் காணின் அல்லது அவை ஒன்றையும் விடயியா' என்றது பொருந்தும்; உயிரானது அறிவுடைய சேதனமாகலின், விளக்கோடு கூடிய கண் போலப் பொறிகளோடு கூடிய துணையால் மட்டுமே, உடன் நின்று உணர்த்தும் முதல்வனை வேண்டாமல், பொருள்களைத் தாமே அறிந்து நுகரும் என்றல் கூடாதோ? எனின்—ஐம்பொறிகளும் ஆன்மாவும் முறையே அறிவின்மையும் அறி

வுடைமையும் ஆகிய வேறுபாடுபற்றித் தம்முள் ஒவ்வா வாயினும், தம்மையும் தமது முதலையும் உணரமாட்டாமைக் கண், ஐம்பொறிகளும் ஆன்மாவும் ஒப்புமையுடையனவே யாம். இவ்வுண்மையினையே, "இவ்வான்மாத் தன்னாலே உண நும் இந்திரியங்களைப் போலத் தானும் தன்னை உணராது நிற்ற லான்" என ஆசிரியர் விளக்குகின்றார். ஆதலால், வினைப் பயன்களை நுகர்தற்கண் ஆன்மாவுக்கு முதல்வனின் துணை இன்றியமையாதாதல் பெறப்படும். அற்றேல், உயிர்கட்கு முதல்வனின் துணை வேண்டப்படுமாயின், அம்முதல்வனுக் கும் வேறொரு முதல்வனின் துணை வேண்டப்படுமன்றோ எனின், தமக்கொரு முதற்பொருளை யுடையனவற்றிற்கே அம்முதற்பொருளின் துணை வேண்டுவதன்றித் 'தம்முணர் வின்நமி' எனவும் 'தமது முதல்' எனவும் போற்றப்பெறும் இறைவனுக்கு அங்ஙியதி இல்லை என்றுணர்க.

அற்றேல் அஃதொக்கும்; 'ஐம்பொறிகள் ஆன்மாவால் உணர்தல்போல, ஆன்மாத் தனது முதலாலே உணரும்' என உரைப்பின், ஐம்பொறிகட்கு வரும் பயன் அவற்றினால் ஒற் றித் துணரும் உயிர்க்காதல்போல, உயிர்க்குவரும் இன்ப துன்பப் பயனும் அதனோடு ஒற்றித்துக்காணும் முதல்வனுக் காதல் வேண்டுமன்றோ? எனச் சிலர் வினா நிகழ்த்துதல் கூடும். உயிரானது தம்மை உடன்நின்று செலுத்துதலால், ஐம்பொறிகள் தமக்கென ஒரு காரணமுமின்றி உயிரின் பொருட்டே பொருள்களை அறிந்து வருகின்றமையின், அவற்றின் பயன் ஐம்பொறிகளுக்கன்றி உயிரினையே சார்கின்றது. ஆனால் முதல்வனோ உயிர்களுக்குக் காட் டாக நின்று, அவ்வுயிர்கள்செய்த வினைக்கீடாகப் பொருள் களை அறிவித்து நிற்பன். ஆதலால், உயிரின் இன்பதுன்பப் பயன்கள் ஒருபோதும் இறைவனை எய்தமாட்டா. 'யாவை யும் சூனியம் சத்தெதிர்' என்றபடி, சத்தின் முன்னர் அசத் துச் சூனியமாய் முடியுமாதலின், உயிர்களுக்குப் பொருள் களைக் காட்டுந் துணையாக உடன் நிற்பினும், சத்தாகிய முதல்வனை அசத்தாகிய இன்பதுன்பப் பயன்கள் சார்வ தில்லை எனத் தெளிக!

'மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகம் சேட்டித்தது'
என்னும் மறையின் இயல்மறந்தாய்!—சொன்னசிவன்

கண்ணு, உளம்,வினையாற் கண்டறிந்து நிற்கும்காண் !
எண்ணான் ! சிவன் அசத்தை இன்று.

இவ்வெண்பாவின்கண், சிவன் என்னும் சொல், 'மன்னு சிவன்' என்புழிப் பேரின்பந்நுந்நுக் காரணன் என்னும் பொருட்டாய்த் தனது சந்நிதிக்கண் உலகத்தைச் சேட்டிப் பித்தற்குரிய இயைபுணர நின்றது; 'சொன்ன சிவன்' என்புழி முற்றுணர்வினன் என்னும் பொருட்டாய் உயிர்களுக்குக் காட்டுந் துணையாதற்குரிய இயைபுணர நின்றது; 'எண்ணான் சிவன்' என்புழித் தூய தன்மையன் என்னும் பொருட்டாய் அசத்தை எண்ணாமைக்குரிய இயைபுணர நின்றது. எனவே, காந்தத்தின் முன்னிலையில் இரும்பு அசைந்து தொழிற்படுமாறுபோலச் சிவத்தின் முன்னர் உலகம் தொழிற்படும் என்றும்; சிவமானது பொருள்களைக் காட்டும் துணையாக நிற்ப, உயிர்கள் தமது வினைக்கீடாகப் பொருள்களை நுகர்ந்து இன்ப துன்பப் பயன்களை எய்தும் என்றும்; உயிர்களோடு உடன் விரவி நின்று அவற்றிற்குப் பொருள்களை உணர்த்தி நுகர்வித்து வருதல்பற்றிச் சத்தாகிய சிவத்தினை அசத்தாகிய இன்பதுன்பப் பயன்கள் எய்துவன அல்ல என்றும் கடைப்பிடித்துக் கொள்க.

அற்றேல், சிவம் உணர்த்துதலால் உயிர்கள் உணரும் என்றுரைப்பின், உயிர்கள் சிவத்தின் வேறுநின்று உணருமோ ? ஒன்றாய் நின்று உணருமோ ? எனின்—

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி, விளங்காது,
வெய்யோனை ஆகாத மீன்போல,—மெய்யவனிற்
கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனைக்
கண்டு,உடனாய் மன்னுதலைக் காண் !

என ஆசிரியர் அதற்கு விடைகூறி விளக்கி இருத்தல் காணலாம். விண்மீன்கள் ஞாயிற்றின் வேறுயாகாது ஒன்றுமாகாது உடனாய் நின்று ஒளியுடையவாமாறுபோல, உயிர்களும் சிவத்தின் வேறாகவும் ஒன்றாகவும் நில்லாது அவ்விரண்டற்கும் பொதுவாய் அடங்கிச் சிவத்தோடு உடனாய் நின்று பொருள்களை உணர்ந்து நுகர்ந்துவரும் என்பது இப் பாடலின் பொருளாகும்.

இனி, அங்ஙனம் உயிர்கள் சிவத்தோடு உடனாய்நின்று சிவமுணர்த்த உணர்ந்துவரும் எனின், உயிர்கட்குப் பல

வேறு வகைப்பட்ட உணர்வுகள் நிகழ்தல் எற்றுக்கு? சிவமே பலவேறு வகைப்பட்ட உணர்வுகளை உயிர்களின் பால் நிகழ்த்துமெனின், சிவம் 'நிர்விகாரி' என்னும் சுருதியொடு முரணி விகாரியாவனன்றோ? எனச் சிலர் தடை எழுப்புவர்.

அருள்உண்டாம் ஈசற்கு, அதுசத்தி! அன்றே!
அருளும் அவன்அன்றி இல்லை!—அருளின்று
அவன்அன்றே இல்லை! அருட்கண்ணார் கண்ணுக்கு,
இரவிபோல் நிற்கும்அரன் ஏய்ந்து!

உயிர்கட்குப் பசுத் தன்மையை நீக்கிச் சிவத்தன்மையை விளக்குதற்கண் உளதாகிய இரக்கம், இறைவனுக்குத் தொன்மையே உள்ளது. அவ்விரக்கம் அல்லது அருளானது இறைவனின் வேறு பொருளாகாமல், அவனிற் பிரிவிலதாம் இயல்பாய ஆற்றலேயாம். அருளும் சிவமும் குணமும் குணியுமாகலின், அருள் இன்றிச் சிவம் இல்லை. சிவம் இன்றி அருள் இல்லை. ஞாயிறு தன் ஒளியுடன் ஒன்றுதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியமாய் இயைந்து நிற்குமாறுபோல, சிவம் அருளோடு தாதான்மியமாய் இயைந்துநிற்கும். ஆதலால், தன்வய முடைத்தாகிய சிவ முதற்பொருள் விகாரமின்றி நின்றே தனது 'சத்தி சங்கற்ப மாத்திரத்தால்' வினைக்கீடாக உயிர்களுக்குப் பொருள்களை உணர்த்தி நிற்கும் என்று தெளிந்துகொள்க.

"இறைவன்தன் சன்னி திக்கண் உலகின்தன் சேட்டை என்னும்
மறைகளும் மறந்தாய்! மாயை மருவிடான் சிவன்! அவன்கண்
உறைதாது அசேத னத்தால்! உருவுடை உயிர்கட் கெல்லாம்
நிறைபரன் சன்னி திக்கண் நீடுணர்வு உதிக்கும் அன்றே!"

"அருளது சத்தி யாகும் அரன்தனக்கு! அருளை இன்றித்
தெருள்சிவம் இல்லை! அந்தச் சிவம்இன்றிச் சத்தி இல்லை!
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன், கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல, ஈசன்!"

—முருகவேள்

கல் எழுத்திலும் சமயப்பரப்பா?

(கோ. கி.)

பண்டைக் கால மக்களுக்கு வரலாற்று அறிவு மிக இருந்தது. தாம் கண்ட செய்திகளையும், தாம் கொண்ட அறிவுரைகளையும், பிற்காலத்தவர் அறிந்துகொள்ளும் வண்ணம் எழுத்துக்களிலும் வடிவங்களிலும், ஓவியங்களிலும் நிலைத்து நிற்கச் செய்தார்கள். அவ்வாறு நிலைத்து நிற்கச் செய்த சாதனங்கள் ஓலை, செம்பு, கல், சுட்டமண் முதலியன. ஓலை நீண்டநாள் நிலைக்காது. ஆகவே செம்பு, கல் இவைகளை நமது நாட்டிலும் சுட்டமண் ஈஜிப்டு முதலிய நாடுகளிலும் சாதனங்களாகக் கொண்டார்கள். கோயில்களுக்குச் செய்யும் உதவிகள் நீண்டகாலம் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தமிழர்கள் கல்லிலும் செம்பிலும் செதுக்கி வைத்தார்கள். கல்லில் வெட்டினது கல்வெட்டு. செப்பில் வெட்டினது செப்பேடு. இவைகள் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கில் கிடைத்திருக்கின்றன. கிடைத்தும் வருகின்றன. கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் பண்டைய மக்களின் வரலாறு மட்டுமேயன்றி, அரசியல், பழக்க வழக்கங்கள், சமய நோக்கம் முதலியவைகளை ஆராயக்கூடும். சிறப்பாகத் தென்நாட்டு வரலாறு முழுவதும் இந்த ஆதாரங்களினால்தான் அறியப்படுகிறது. கல்வெட்டுச் சாதனங்கள் பொதுவாகக் கோயில்கள், கோயில் பணிவிடையாளர்கள் முதலியோர்களுக்குக் கொடுத்த கொடைகளைப்பற்றி இருந்தாலும் அவைகளை விவரிக்கும் வகையில் ஏனைய வரலாற்றுச் செய்திகள் முழுமையும் கிடைக்கின்றன. அப்படிப்பட்ட சார்புச் செய்திகளை ஆராயும் வகையில்தான் நாட்டுப் பண்டை நிலை அறியப்படுகின்றது. வெறும் வரலாற்றுச் செய்திக்ள் பண்பாடு அறிவதற்குப் பயன்படுகின்றன. ஆனால் இன்னும் பல செய்திகள் சமய நிலை அறியப்பயன்படுகின்றன. அந்தப் பகுதியை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றோம்.

தென்நாட்டுச் சாசனங்கள் அடியிற்கண்ட சமயப் பகுதிகளை விளக்குகின்றன.

1. கோயில் : கோயிலின் தன்மை, புகழ், பெருமை இறைவன் இறைவி பெயர்கள், இறைவன் திருவிளையாடல்

கள், இவைகளில் மாறுபாடுகள் ஏற்பட்டிருந்தால் அவைகளையும் அறியக்கூடும். எடுத்துக்காட்டாகத் திருப்பேரூர்க் கோயிலின் பெயர்களில் இறைவன் பெயர் வடமொழியில் கோஷ்டீசுவரர் என்றும் தமிழில் பட்டீசுவரர் என்றும் இறைவியின் பெயர் வடமொழியில் மரகதாம்பா என்றும் தென் மொழியில் பச்சைநாயகி என்றும் வழங்கினர்கள். கல்வெட்டிலோ இறைவன் பெயர் திரு ஆன் பட்டியுடையார் என்றும், நடராஜரின் பெயர் கூத்தாடு தேவர் என்றும் இருக்கக் காண்கிறோம்.

2. தலங்கள் : இவைகளின் பண்டைப் பெயர்களும் புதுப்பெயர்களும் எளிதில் அறிய முடியும். ஈரோடு என்ற சொல்லை இக்காலத்தார் ஈர+ஓடு என்று பிரித்து இறைவனை அர்த்த கபாலீகர் என்று கூறுகின்றனர். கல்வெட்டுக்களோ இரு+ஓடை என்று பிரித்து இரண்டு ஓடைகளுக்கு இடையில் உள்ள தலம் என்றும், இறைவன் தொண்டீசர் என்றும் கூறுகின்றன. மற்றொன்று கொங்குநாட்டு வைப்புத் தலமாகப் போற்றப்பட்டுச் சுந்தர மூர்த்திகளால் 'கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய்' எனப் போற்றப்படும். குரக்குத்தளி, பெரியபாளையம் என்று தற்போது வழங்கும் ஊர் என்று அக்கோயில் கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது.

3. ஆறு - தீர்த்தம் முதலிய நீர்நிலைகள் : தற்போது நொய்யல் என வழங்கும் கோவை ஆறு முன் காலத்தில் காஞ்சி நதி என வழங்கிற்று எனப் பேரூர்க் கல்வெட்டும் சென்னைக் காட்சிச்சாலைச் செப்பேடும் கூறுகின்றன. கிழக்கே அரிசில் ஆறு, தெற்கே தேனாறு இவைகளின் உண்மைப் பெயர்கள் கல்வெட்டுக்களினாலே அறியக் கிடக்கின்றன. புராணப் பெயர்கள் வெறும் கற்பனைகள் என்று தெரிவிக்கும்.

4. அடியார்கள் வரலாறுகள்: இலக்கியங்கள், சமயநூல்கள் இவைகளில் அடியார்களின் வரலாறுகள் நமக்குக் கிடைத்திருந்தபோதிலும் அவைகளின் உண்மை நிலையை நன்கு அறிவதற்குக்கல்வெட்டுச் சான்றுகளே பயன்படுகின்றன. கல்வெட்டுச் சான்றுகளோடு இலக்கியச் சான்றுகளையும் இணைத்து ஆராய்ச்சி செய்த வகையில் பூசலார் புராணம்,

கழற்சிங்கர் புராணம், சம்பந்தர் காலம், மற்ற அடியார்களின் காலம் முதலியன அறியப்படுகின்றன.

5. வரலாற்று உண்மை : கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் வரும் பல சொற்றொடர்கள் உண்மைச் செய்திகளைத் தெரிவிக்கின்றன. படிக்காசு வைத்த நாயனார், குளிச்செழுந்தநாயனார், முத்துச் சிவிகை அருளிய நாயனார், பிச்சன் என்று பாடச் சொன்னான், தத்தா நமரே காண் என்ற நாயனார், வழக்கு வென்ற மன்று முதலிய சொற்றொடர்கள் அடியார்களின் வரலாறுகளை உறுதிப்படுத்துகின்றன.

6. சமயப்பிரசாரம் : திருமுறைகள் போன்ற சமய நூல்கள் ஒப்புக்கொள்ளப்பட்டு அந்நூல்களில் கண்ட இறைவன் புகழ்ப் பாடல்களைக் கோயில்களில் ஓதுவதும் அதற்காக ஓதுவார்களை நியமித்தும் அவர்களுக்கு நிலக் கொடைகள் தந்தும் பிரசாரம் செய்யப்பட்டது. இந்த வகையில் தஞ்சைக் கோயில் முதலிய பெருங் கோயில்களிலே திருப்பதிகங்கள் பாடுவது திருவாசகம் திருப்பள்ளியெழுச்சி ஓதுவதும் மிகப் பிரசித்தி யடைந்தன. இந்த ஏற்பாடுகள் சோழர் காலம் முதலாக எங்கும்செய்யப்பட்டன.

7. திருவிழாக்கள் : நித்திய நைமித்திக சிறப்புத் திருவிழாக்கள் ஆகமங்களின்படி செய்யப்பட்டு வந்தன. மன்னர்களும் செல்வர்களும் தங்கள் பிறப்பு நாள்களின்போது விழாக்கள் கொண்டாடக் கோயில்களுக்கு நிரம்ப வசதிகள் செய்வித்தனர். இவைகளின் விவரங்கள் கணக்கற்ற கோயில்களிலும் காணலாம். திங்கள் விழாக்களும், சூரிய சந்திரக் கிரகண காலங்களிலும் நடைபெற்றன. அவ்வப்போது குற்றம் குறை நீங்கக் கொடைகள் ஈயப்பட்டன.

8. கோயில் திருப்பணிகள் : காலக் கொடுமையினலோ மன்னர் சூறையாடல்களினலோ கோயில்கள் பாழடைந்து போயின. அவைகளின் திருப்பணிகளை அரசர்கள் ஏற்றுக் கொண்டு சீர்திருத்திக் கடவுள் மங்கலங்கள் செய்யப்பட்டன. செட்டி நாட்டில் குன்றக்குடியிலும் கொங்கு நாட்டில் ஆம்பிராவதிக் கரையிலும் இவ்வித திருப்பணிகள் செய்யப்பட்ட செய்திகளைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

9. நிர்வாகம் : கோயில்களின் ஆட்சி பொதுவாக கிராம சபைகளின் பார்வையில் இருந்தது. சில துரோகிகள்

செய்த நிர்வாகத்தை விசாரித்து அவர்களுக்குத் தண்டனை கொடுத்த செய்தியையும் சில கல்வெட்டுக்கள் கூறு கின்றன. இவ்வித வழக்குகள் பல குலோத்துங்கன் III காலத்தில் நிறைவேறின.

10. ஏனைய திருந்தங்கள் : கோயில்களில் 100, 1000 கால் மண்டபங்களும் பெரும் கோபுரங்களும், தெப்பக் குளங் களும், தடாகங்களும், நந்தவனங்களும் மடவிளாகங்களும் அங்கங்கே தோற்றுவிக்கப்பட்டன. மேலும் சமயப் பொறையும் சமய ஒற்றுமையும் மிக எளிதாக அரசியலா ரால் கொள்ளப்பட்டு நாடெங்கும் சமய சித்தாந்தங்கள் போதிக்கப்பட்டன. இவைகளும் இவைகளைப் போன்ற மற்றச் சமயப் பணிகளும் நிரம்பச் செய்யப்பட்டன.

தமிழில் கணக்கற்ற கல்வெட்டுக்களும் செப்பேடுக ளும் இச்செய்திகளைக் கூறுகின்றன. மேலும் தெலுங்கு, கன்னடம் என்ற அருகில் உள்ள மொழிகளிலும் இவை களைப்போன்ற செய்திகள் காணப்படுகின்றன. ஆகவே தென் இந்தியாவில் கல் வெட்டுக்களையும் செப்பேடுகளையும் ஆராய்ச்சி செய்தாலே போதும். அளவற்ற சமய அறிவைப் பெறலாம். பல கல்வெட்டுக்களில் சமயத்தைப்பற்றிய பாடல்களும் சொற்றொடர்களும் காணலாம். இவைகளை யெல்லாம் தொகுத்து வெளியிடின் மிகுந்த நன்மை ஏற் படும்.

(தொடரும்)

மதிப்புரைகள்

1. அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சூழ்நிலைகள் :—பல்கலைக் கழகத்து வெள்ளி விழா மலராக வெளியிடப்பட்டது. ஆசிரியர் ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல். அவர்கள். ஆங்கிலம். மிக அழகிய பதிப்பு. நிரம்ப ஓவியங்கள் கொண்டது. பல்கலைக் கழகத்தின் வரலாறும், அதனைச் சுற்றியுள்ள புனிதக் கோயில்களின் விவரங்களும் வெகு தெளிவாக வரையப்பட்டுள்ளன. சிதம்பரம், சுற்றுக் கோயில்கள், திருவேட்களம், திருக்கழிப்பாலை, திருநெல் வாயில் என்ற பாடல் தலங்கள், திருப்புலீச்சரம், கொற்ற

வன்குடி, மடாலயங்கள், தீர்த்தங்கள் முதலியவைகள் கல்வெட்டு ஆராய்ச்சிகளுடன் கூறப்பட்டுள்ளன. இந்நூல் ஒவ்வொரு தமிழன் கையிலும் இருக்கவேண்டியது.

2. திருச்சிற்றம்பலவன் கோயில் வரலாறு :—மேலே கண்ட நூலில் சுருக்கமாக உள்ளதை மிக விரிவாக அதே ஆசிரியர் எழுதி வெளியிட்டிருக்கிறார். தில்லையின் பண்டைச் சரித்திரம் தக்க சான்றுகளோடு அறியவேண்டும் என்றால் இந்நூலில்தான் வாசிக்கவேண்டும். கல்வெட்டு, இலக்கியம் வடநூல் ஆதாரவு முதலிய பல முறைகளிலும் இந்நூல் சிறந்து விளங்குகிறது. இதனை எல்லாத் தமிழர்களும் வாங்கிப் படித்து உய்யவேண்டும். படங்கள் மிகவும் அழகாக இருக்கின்றன. ஜே. எம். எஸ். அவர்கள் தமிழ்நாட்டிற்குச் செய்த பெருந் தொண்டுகளில் இந்நூலும் ஒன்றாகும். விலை அணா 12.

3. பெரிய புராணம் :—ஆங்கில மொழிபெயர்ப்பு. உயர் திரு. ஜே. எம். நல்லசாமி பிள்ளையவர்கள், பி.ஏ., பி.எல். எழுதியது. மிக நன்றாகப் பதிப்பிக்கப்பட்டது. திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல். முயற்சியால் வெளிவந்துள்ளது. தமிழ் அறியாத மக்களுக்கு ஒரு பொக்கிஷமாக விளங்குவது. தமிழ் மக்களும் ஏனையோரும் படித்துப் பயன்பெற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 3—0—0.

4. சிவஞான போதம் :—உரைச் சுருக்கம். உரையாசிரியர் பட்டுசாமி ஓதுவார். அருள்நந்தி நிலைய வெளியீடு. பாராயணத்திற்கு உதவும். கைக்கு அடங்கிய பதிப்பு. போகும் இடங்களுக்கு எல்லாம் எடுத்து ஏகலாம். அணா 3.

5. பிள்ளையார் பட்டிப் பிள்ளையார் கோயில் :—ஆசிரியர் திரு. பாஸ்கரத் தொண்டைமான் எம்.ஏ. பிள்ளையார்நோன்பு வெளியீடு. அழகிய படங்கள் ஆறு கொண்டது. பிள்ளையாருடைய தத்துவங்கள் வெகு தெளிவாக வரையப்பட்டுள்ளன. மிகப் பொருத்தமான மேற்கோள் பாடல்கள் ஆங்காங்கே இணைக்கப்பட்டுள்ளன. இச்சிறு நூலிலும் தொண்டைமானுடைய இணையற்ற இனிய தமிழ்நடையைக் காணலாம்.

மரபு-சைவசித்தாந்த சாரம்*

தொன்மைச் செய்தியும், ஐந்தெழுத்தின் உண்மையும், கேள்வி வழியாக வருவதால் திருவாக்குப் பெற்று அறிக.

முதல் பொருள்: அருளுக்கு வேறுகாத கடவுள், உயிர்கள், ஆனந்தம் என்னும் ஆணவமலம், நுகர்வினை, சிதைவுச் சத்தியாகிய சுத்தமாயை, தூவாமாயை ஆக முதல் பொருள் ஆறு. இவையும் சிதைவுச் சத்தியின் பேதமாகிய மறைப் பாற்றல் (திரோதம்) ஒன்று, ஆக வகை இரண்டிற்குக் கூடிய இவ்வேழு பொருளையும் அடக்கி முப்பொருளாகச் சொல்லுதலும் உண்டு.

1. நன் இயல்பு :—அருளுக்கு வேறுகாத கடவுளுக்கு, உயிர்களுக்கு, ஆணவமலத்திற்கு, நுகர்வினைக்கு (பிராரத்த கன்மம்), சிதைவுச் சத்தியாகிய (பின்னுசத்தி) சுத்த மாயைக்கு, தூவாமாயைக்கு, பின்னு சத்தியாகிய அசுத்த மாயையின் பேதமாகிய பிரகிருதி மாயைக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணங்கள் உண்டு. தனித்தனியே ஒவ்வொன்றுக்கும் இரண்டு குணங்கள் வருமாறு:—

பதிக்கு (1) தனக்கு ஒருவரும் அறிவியாமல் தானே அறியும் குணம். (2) உயிர்களுக்கு அறிவிக்கின்ற குணம். உயிர்களுக்கு (1) அறிவித்தால் அறிகின்ற குணம். (2) பிறருக்கு அறிவிக்கமாட்டாத குணம். ஆணவமலத்திற்கு (1) புகழில் அவா, பொருளில் அவா, யான் என்பதை விளக்கும் கந்தபீசமங்கா வாடையையுடைய தனது சத்தியினுலே ஆன்மாக்களை யானே எல்லோரினுந் திறவான் என்று நினைக்கப் பண்ணும் குணம். (2) உயிர்களைத் தனதல்லாத உடல், உலகம் முதலியவைகளைத் தனது என்று நினைக்கப்பண்ணும் குணம். நுகர்வினைக்கு (1) உயிருக்குக் கட்டுற்ற காலத்தில் இன்ப துன்பமாகத் தோன்றும் குணம். (2) உயிருக்கு முத்திகாலத்தில் மலமருந்தாகத் தோன்றும் குணம். சுத்த மாயைக்கு (1) அண்டத்திலும் பதி இனவர்க்கத்துக்கு இட

---

* 1903-ல் சென்னை ரிப்பன் அச்சகத்தில் இலங்கை வதிரி. வித்துவான் சி. தாமோதரம் பிள்ளை அச்சிட்ட பதிப்பைத் தழுவிய தமிழாக்கம்.—தி. கி. நா.

மாக இருக்கின்ற குணம். (2) பிண்டத்திலும் பதி இன வர்க்கத்துக்கு இடமாக இருக்கின்ற குணம். **நூவா மாயைக்கு** (1) உயிருக்கு எந்தக் காலமும் வினைத் துணையாகவும் (கன்மதாரகமாகவும்) சர்வ சங்காரகாலத்தில் உயிர்களுக்குத் துணையாகவும் (தாரகமாகவும்) இருக்கின்ற குணம். (2) அபரநாதம் முதல் பிரமம் ஈறாக எழு மூர்த்தத்துக்கும், மற்றும் உள்ள பதி இனவர்க்கங்களுக்கும், மூவகை ஆன்மாக்களுக்கும், உடல், கருவி, உலகம், நுகர் பொருள்களாய் இருந்து, அவைகளிலே நிறைந்து நிற்கும் குணம். **திரோதந்திக்கு** (1) உயிர்க்குப் பக்குவம் பிறக்கும் படிக்கு உலகத்தை எல்லாம் வினை முதல்வரே தொழிற்படுத்துகின்றார் என்பதை மறைக்கும் குணம். (2) உயிர்க்கு வினைமுதல்வர் ஓர் உடலைக்கொடுத்து, பற்றி இருக்குங்கால், மற்றைய உடல்களைப் பற்றாமலும் மூவகைத் திரிவாக மறைக்கும் குணம். **பிரகிருதிமாயைக்கு** (1) மாயா காரியங்களைப் பண்டப் பொருளாகக் காட்டிநிற்கும் குணம். (2) உயிரை முக்குண வேறுபாடுகளிலும் மயக்குவிக்கும் குணம்.

2. பொது இயல்பு :—சிற்பரந்தையுடைய உயிரும், மலமும், தொன்மைக் குழப்பத்தில் ஆனந்தமாகிய உன்னலில் தோன்றியன. பரநாதமும், பரவிந்துவும், மாயையும் அருளாகிய எதுவில் தோன்றினவை. அந்த மாயையும் 'பரவிந்துவுக்கு உயிரின் மலத்தை நாமே தீர்க்கவேண்டும்' என்ற மயக்கத்தைக் கொடுத்துக்கொண்டு நின்று, அந்தப் பரநாதம் பரவிந்துவில் தோன்றிய அபரம், துவித நாதத்திற்கு உடலாகவும், அபரவிந்துவுக்குப் பரம அணுவாகிய உடலாகவும் நிற்கும். இந்த அபரம் அந்த மாயையை, சுத்த மாயை, அசுத்தமாயை என இரண்டு வகையாக வகுத்து, கடவுள் வேறுபாடுகளுக்கும், உயிர்களுக்கும் கொடுத்தது. உயிர் அந்த ஆணவ மலத்தில் அழுந்துகிறபோது, மேலிட வேண்டும் என்ற அவாவாகிய மலசத்தி முதிர்ச்சிபட்டதைக், கடவுள் இரக்கத்தினாலே அறிந்து, அந்த மலசத்தியைத் தீர்த்துத் தனது திருவடியில் சேர்த்துக்கொள்ள வேண்டி, உயிருக்கு மல சத்தியாகிய அவாவின் தரத்திலும் அதிக தரமாகிய மாயா உடலைக்கொடுத்தாலும், சரீரமாகிய மாயா உடலைக் கொடுத்தாலும், உடலை மலசத்தி விழுங்கி

வெளியிலே பொங்கிவர மாட்டாதென்பதால், மல சத்தியின் தரத்திலும் குறைந்த தரமாகிய உடலைக்கொடுத்தது. அந்த மலசத்தி அந்த உடலைவிழுங்கி வெளியிலேவந்தது. இப்படி வெளியிலே பொங்கிவந்த மல சத்திக்கு, மலசத்தியின் தகுதியிலும் குறைந்த நிலையாகிய பிராரத்தத் துய்த்தலைக் கொடுத்தாலும், மல சத்தியை அடக்கி விழுங்க மாட்டாதென்று, அதிகத் தகுதி நிலையாகிய பிராரத்தத் துய்த்தல் என்னும் துன்பத்தை அந்த உடலோடுவைத்து, மறைப்புச் சத்தியினலே மறைத்து மறைத்துக் கொடுத்து, மலசத்தியை அடக்கி விழுங்கப்பண்ணிற்று. மலசத்தி பொறியாகிய உடலைத் தனக்கு இலேசாகக் கண்டு விழுங்கினதாலே, பொறிக்கு இணங்கின துய்த்தல் மாத்திரம் மல சத்தியோடு சேர்ந்த உயிர் அறிவிற்கு இன்பம். கட்டளையிட்ட பிராரத்தத்தை மலசத்தி தனக்கு எளிதாகக்கண்டு விழுங்கினதாலே, மலசத்தியோடு சேர்ந்த உயிர் அறிவிற்கும் பொறிக்கும் இணங்காத துய்த்தல் எல்லாம் துன்பம். மலசத்திக்குத் தாழ்ந்த தகுதிநிலையாகிய பொறி அளவு துன்பம் என்னும் பிராரத்தத்தைக் கொடுத்தால், பொறியை விழுங்கின மலசத்தி; இந்தப் புசிப்பையும் விழுங்கிவிடும் என்பதால், பொறிக்கு அதிகத்தரமாக, பொறி தாங்கமாட்டாத புசிப்பையும் கொடுத்தது. மலசத்தியை அடக்கி விழுங்கும்படியாகக் கட்டளையிட்ட துன்பத்தில், மலசத்திக்குள் அடங்கிய பொறிக்குள்ளே அடங்கின துன்பப் புசிப்பை மாத்திரம் மல சத்தியோடு சேர்ந்த உயிர் அறிவு இன்பமாகக்கொண்டு விரும்பிற்று. இந்தப் பொறியுள் அடங்காத துன்பநுகர்ச்சியை மலசத்தியோடுசேர்ந்த உயிர் அறிவு துன்பமாகக் கொண்டு வெறுத்தது. இப்படி விரும்பி வெறுத்துத் துய்க்கையில் அந்தத் துய்த்தலை வேண்டும் வேண்டாமென்று முற்றினன். இப்படி முற்றின நினைவை மேல் நடத்த வகைதெரியாத உயிருக்குக் கடவுள், உயிர்களுக்கு இதவகிதமாக முடிகிற இருவினையைக் காட்டினர். அந்த நல்வினை, தீவினையாகிய ஆகாமியத்தை உயிர் செய்ய, அது மாயையிலே கட்டுக்கிடையாகிய சஞ்சிதமென்னும் புண்ணிய பாவமாகக் கட்டுப்பட்டது. இந்தக் கட்டுப்பாடு, வரு பிறப்பையும் விளைவித்து, அதற்குப் பிராரத்தமென்னும் இன்ப துன்பத்தையும் விளைவிக்கும். உயிர்

விரும்பி வெறுத்து நுகர்கையில், வேண்டும் வேண்டா மென்று முற்றுதலால் ஆகாமியம் ஆயிற்று. இப்படிப் பிறப்பு, இறப்புப் படுங்காலம், கிரியாசாரியரால் மூன்று தீக்கையும்பெற்று, வேறு வினை என்று பெயரையுடைய உபாயச் சரியையாதி நான்கும், உண்மைச் சரியை கிரியா யோக மூன்றும் செய்யவருங்கால், முளைகுருத்தென்று பெயரையுடைய யான், எனது என்னும் மலசத்தி கெட்டு, இருவினையும் சரியாகக் கண்டகாலம், உயிர் அருளோடு சேர்ந்ததென்று கடவுள் அறிந்து, திருமேனிகொண்டு, சுத்தாவத்தைப்படுத்தி, வேர் கிழங்கென்னும் யாக்கையில் அவாவையும், புகழில் அவாவையும் தீர்த்துத் தமது திருவடி களிலே சேர்ப்பிக்கும்.

3. முதல் தோற்றம் :—முதலிலே பிரமா உலகம் உண்டாக்கவேண்டும் என்று அபரத்தை நோக்கி, பிரமத்தை உச்சரித்துக் கொண்டிருக்கிறபோது, அவர் நெற்றியிலே ஒரு தேவப் பிராமணனும் பிராமணப் பெண்ணும் பிறந்தார்கள். அவர்கள் இருவரும் பிரமாவின் உத்தரவின்படி, 1100,000 முக வேற்றுமையாய் உடல் எடுத்துப் புணர்ந்த போது, 1100,000 முக வேறுபாட்டிற்கும் ஒரொரு தேவப் பிராமணனும் பெண்ணும் பிறந்தார்கள். இவர்கள் சேர்க்கையால், அந்தந்த முகவேற்றுமையாய் விரிந்தது. ஆதிப் பிராமணனும் அப் பெண்ணும் பிரமாவின் உத்திரவுப்படி 900,000 முக பேத மானிடப் பிராமணராக உடலெடுத்துக் கூடிப் புணர்ந்தபோது 900,000 முக வேறுபாட்டிற்கும் ஒரொரு மானிடப் பிராமணனும் பெண்ணும் பிறந்தார்கள். இவர்கள் சேர்க்கையால் அந்தந்த முக வேறுபாடு விரிந்தது. பிர்மாவின் இருதயத்திலே ஒரு தேவ க்ஷத்திரியனும் பெண்ணும் பிறந்தார்கள். அவர்கள் இருவரும் பிரமாவின் உத்தரவின்படி 1100,000 முக வேற்றுமையாய் உடலெடுத்துப் புணர்ந்தபோது, 1100,000 முக வேறுபாட்டிற்கும் ஒரொரு தேவ க்ஷத்திரியனும் பெண்ணும் பிறந்தார்கள். அவர்கள் சேர்க்கையினாலே அந்தந்த முக வேறுபாடு விரிந்தது. அந்த முதல் க்ஷத்திரியனும் பெண்ணும் பிர்மாவின் கட்டளைப்படி 900,000 மானிட க்ஷத்திரியராக உடலெடுத்துப் புணர்ந்த போது, 900,000 முக வேற்றுமைக்கும் ஒரொரு மானுட க்ஷத்திரியனும் பெண்ணும் பிறந்தார்கள். அவர்கள் சேர்க்

கையினலே அந்தந்த முக வேறுபாடு விரிந்தது. பிரமாவின் தொடையிலே, ஒரு தேவ வைசியனும் பெண்ணும் பிறந்தார்கள். இவர்கள் இருவரும் பிர்மாவின் கட்டளைப்படி 11,00,000 முக வேறுபாடாய் உடல் எடுத்துப் புணர்ந்த போது, 11,00,000 முக வேறுபாட்டிற்கும் ஒரொரு தேவ வைசியனும் பெண்ணும் பிறந்தார்கள். இவர்கள் புணர்ச்சியினலே அந்தந்த முக வேறுபாடு விரிந்தது. அந்த முதல் வைசியனும் பெண்ணும் பிர்மாவின் கட்டளைப்படி 900,000 முக வேற்றுமையாய் மானிட வைசியராய் உடலெடுத்துப் புணர்ந்தபோது, 900,000 முக வேறுபாட்டிற்கும் ஒரொரு மானுட வைசியனும் பெண்ணும் பிறந்தார்கள். இவர்கள் புணர்ச்சியினலே, அந்தந்த முக வேற்றுமை விரிந்தது. பிரமாவின் காலிலே ஒரு தேவ சூத்திரனும் பெண்ணும் பிறந்தார்கள். இவர்கள் இருவரும் பிர்மாவின் கட்டளைப்படி 11,00,000 முக வேற்றுமையாய் உடலெடுத்துப் புணர்ந்த போது, 11,00,000 முக வேறுபாட்டிற்கும் ஒரொரு தேவ சூத்திரனும் பெண்ணும் பிறந்தார்கள். அவர்கள் புணர்ச்சியினலே அந்தந்த முக வேறுபாடு விரிந்தது. அந்த முதல் சூத்திரனும் பெண்ணும் பிர்மாவின் கட்டளைப்படி 900,000 முக வேறுபாடாய் மானிட சூத்திராக உடலெடுத்துப் புணர்ந்தபோது, 900,000 முக வேற்றுமைக்கும் ஒரொரு மானிடச் சூத்திரனும் பெண்ணும் பிறந்தார்கள். இவர்கள் புணர்ச்சியினலே அந்தந்த முக வேறுபாடு விரிந்தது. இந்த நான்கு ஜாதிகளும் ஒரு ஜாதியுடனே ஒரு ஜாதி கூடிப் புணர்ந்து பல ஜாதிகள் உண்டாயின. பிர்மா, மற்றைத் தேகங்களைப் படைக்கவேண்டி வளர்த்த ஓமத்தில், நாற்கால் விலங்கு 10,00,000 முக வேறுபாட்டிற்கு ஒரொரு ஆணும் பெண்ணும், பறவைகள் 10,00,000 முக வேறுபாட்டிற்கும் ஒரொரு ஆணும் பெண்ணும், நீர்வாழ் ஜாதி 10,00,000 முக வேறுபாட்டிற்கும் ஒரொரு ஆணும் பெண்ணும், ஊர்வன ஜாதி 15,00,000 முக வேறுபாட்டிற்கும் ஒரொரு ஆணும் பெண்ணும், தாவரம் 19,00,000 முக வேறுபாட்டிற்கும் ஒரொரு ஆணும் பெண்ணும் பிறந்தன. இவைகளால் அந்தந்த முகவேறுபாடு விரிந்தது. இவைகளில் ஒரு முக பேதத்தில் ஒரு முகபேதம் தோன்றுவதும் உண்டு.

4. முப்பொருள் நிறைவு :—பதி வியாபகமென்னும் தாரக நிறைவாயிருக்கும். பசுவும் பாசமும் வியாத்தமென்னும் சம நிறைவாக இருக்கும். இந்தச் சமநிறைவாகிய இரண்டு பொருளும் தாரக நிறைவாய் இருக்கின்ற பதியில் கடல்வெளியிலே உப்பும் நீரும் கலந்து அடங்கி இருப்பது போல, வியாப்பியமென்னும் ஒன்றில் ஒன்று அடங்கின நிறைவாய் இருக்கும்.

5. முப்பொருள் தன்மை :

பெயர்	பொருள்	வடிவம்	தன்மை
ஆணவமலம்	வியாதி	இருள்	அகமறைப்பு
கன்மமலம்	மருந்து	விடயம்	மலமடக்கல்
சுத்தமாயை அசுத்த மாயை மலம்	பாத்திரம்	தேகம்	கன்மதாரகம்
திரோதமலம்	திரை	படம்	புறமறைப்பு
பசு	வியாதி	சேர்ந்தவண்ணம்	இரட்சைப்படுதல்
பதி	வைத்தியம்	பிரகாசம்	இரக்ஷித்தல்

6. கடவுள் ஒன்று :—அரசன் ஒருவனுக இருந்து எண்ணிறந்த ஊர்களிலே, எண்ணிறந்த பேர்களுக்கும், எண்ணிறந்த வீட்டைக்கொடுத்து, எண்ணிறந்த இன்ப துன்பத்தை நுகர்விப்பதுபோல, கடவுள் ஒருபொருளாக இருந்து, தமது சத்தியினுலே, எண்ணிறந்த உலகங்களிலே, எண்ணிறந்த உயிர்களுக்கு எண்ணிறந்த உடல்களைக்கொடுத்து, எண்ணிறந்த பிராரத்தத்தை நுகர்விக்கும்.

7. கடவுள்-வேறுபாடின்மை :—ஒருவன் வயிற்றினுள் இருக்கிற புழுப்படும் துன்பம் அவனுக்குத் தாக்காதது போல, கடவுள் வியாபகத்துக்குள்ளே இருக்கிற உயிர்படும் நரகவேதனை முதலிய துன்பம் கடவுளுக்குத் தாக்காது.

8. கடவுள்-மலங்கலத்தல் :—மரத்தினிடத்திலே முதற் காலத்தில் நீர் மிகுந்து நெருப்பு குறைந்திருப்பதுபோல, மலமும், மலப் பகையாகிய கடவுளும் ஓர் உயிரினிடத்திலே கூடியிருக்கும்.

9. கடவுள்-உயிர்கலந்தல் :—அரசனிடத்திலே ஒரு அமைச்சன் பிரியாமலிருந்து அறிவுரை சொல்லுவதுபோல முதலில் மலத்துடன் இருக்கிற உயிர்களிடத்தில் சிற்பரமாகிய திருவருள் அணுவளவாக இருந்து, கன்மநுகர்ச்சியினால் மலம் ஒடுங்க ஒடுங்க, சிற்பரம் பெருகிவளர்ந்து, உயிர்களுக்கு இரக்கத்தையும் அச்சத்தையும் கொடுத்துக் கொண்டு நிற்கும்.

10. கடவுள் - மூர்த்தம் :—முதலிலே கடவுள் உயிரின் ஆணவ மலத்தைப் பொறுக்காமையால் பிறந்த தனது இரக்கமாகிய பராசத்தியில் அடங்கி அபின்னமாகி நிற்பன். இப் பராசத்தி உயிர்களுக்கு, ஆணவ மலத்தைத் தீர்ப்பதற்கு நாமே அன்றி மேல் முதல் இல்லை என்ற நிலை திரோதான சத்தியாகிய ஆதிசத்தி. அப் பராசத்தி அந்த ஆணவ மலத்தை நீக்கி உயிரை எடுக்க வேண்டிய ஆசையாய் நின்ற நிலை - இச்சாசத்தி. பராசத்தி ஆணவ மலத்தின் தரத்தையும் பிராரத்த கன்மத்தின் இயற்கையையும் அறிந்து நின்ற நிலை, ஞானசத்தி. பராசத்தி ஆணவ மலமாகிய உயிரின் சகச மலத்தைத் தீர்ப்பதற்கு ஆகந்துக மலமாகிய பிராரத்த கன்மமலம், திரோதமலம், சுத்தமாயா மலம், அசுத்தமாயா மலம் ஆக நாலையும் கருவியாகக் கூட்டவேண்டும் என்று நின்ற நிலை, கிரியாசத்தி. ஆக இப் பஞ்ச சத்தி மூர்த்திமானாக நின்ற பரமனுக்கு, அருவமாகிய பரநாதம் என்றும், ஆதிசத்தி முதலான நாலு சத்தியையும் உடைய பராசத்திக்கு அருவமாகிய பரவிந்து என்றும் பெயர். இது ஞானிகளுக்குத் தரிசனம். இப்பராசத்தி, உயிர்களுக்கு ஆகந்துக மலத்தைக் கூட்டுவிக்கும் தரமாக நிற்கவேண்டும் என்று நின்ற நிலையில் தோன்றிய சிவத்திற்கும், அபின்னமாகிய சத்திக்கும், அருவமாகிய அபரநாதம் என்றும் அபரவிந்து என்றும் பெயர். இது யோகிகளுக்குத் தரிசனம். இந்த அபரசத்தி உயிர்களுக்கு ஆணவமலம் தீர, பிராரத்த கன்மத்தைக் கொடுக்க வேண்டும் என்று நின்ற நிலையில் தோன்றியது. அருளல் தொழிலையும் அருவுருவத்தையும் உடைய சதாசிவமும் மனோன்மணியும். அபரசத்தி உயிர்களுக்குப் பிராரத்த கன்மத்தை ஒவ்வொன்ருக மறைத்து மறைத்துக்கொடுக்க வேண்டும் என்று நின்ற நிலையில் தோன்றியது மறைப்புத் தொழிலையும் உருவத்தையும் உடைய மகேசுவரனும் ஈசுர

சத்தியும். அபரசத்தி உயிர்களுக்கு இளைப்பு ஒழித்தல் காரணமாக, பிராரத்த கன்மத்தை மாற்றி மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று நின்ற நிலையில் தோன்றினது அழித்தல் தொழிலையும் உருவத்தையும் உடைய உருத்திரனும் உமையும். அபர சத்தி உயிரின் அறிவிலே பிராரத்த கன்மத்தை அறியும் தொழிலுக்கு அந்தக்கரணத்தை நிறுத்த வேண்டும் என்று நின்ற நிலையில் தோன்றியது காத்தல் தொழிலையும் உருவத்தையும் உடைய திருமாலும் இலக்குமியும். அபரசத்தி உயிர்களுக்கு பிராரத்த கன்மத்தை அறியும் தொழில் நிறுத்துகின்றதற்குத் துணையாக அறிகருவியைக் கொடுக்க வேண்டும் என்று நின்ற நிலையில் தோன்றியது படைத்தல் தொழிலையும் உருவத்தையும் உடைய அயனும் கலைமகளும். ஆகச் சதாசிவம் முதலாக பிரமா ஈறாகத் தேவர்களுக்குத் தரிசனம். ஆக இப்படி மூர்த்திகரிப்பது.

11. கடவுள் பொருள் வேறுபாடு :—முதல் படைப்புக் காலம் கடவுளாகிய அபரநாதம், அபரவிந்துவில் தோன்றினது. மண் முதலாகப் பூதம் ஐந்து. இதற்கு மிக நுண்ணிய பருப்பொருள் என்றும் பெயர். இது புறப் பருப் பொருள், அகப் பருப்பொருள் என இருவகையாக இருக்கும். அதில் புறப் பருப்பொருள் வேறுபாடாகிய மண் முதல் ஐந்தும் பிரமாதி ஐவருக்குத் துணையாக நின்று, அவரவர் ஒடுங்கும் காலம் அந்தந்தப் பருப் பொருளும் ஒடுங்கும். இந்த மிக நுண்ணிய ஐந்து பருப்பொருள்களை நோக்க, அசுத்த மாயா தோற்றமாகிய கை, கால் முதலாகவுள்ள உடலுக்கு நுண் பருப் பொருள் என்று பெயர். அந்த நுண் பருப்பொருளை நோக்க மண், நீர், அனல், கால், வான் ஆக இப்படி இருக்கின்ற உடலுக்குப் பருமைப் பருப்பொருள் என்று பெயர். இது புறப் பருப்பொருள் வேறுபாடு. அகப் பருப்பொருள் மண் முதலிய நுண் பருப்பொருள் ஐந்தும் உடல்களிலே நின்று உயிர், ஐம்பொறிகளிலும் சென்று, நுகர்வதற்கு இடமாக இருந்து, தன் தன்மைகளை மாயா முதல்களுக்குக் கொடுத்துக்கொண்டு நிற்கும். இது அகப் பருப்பொருள் வேறுபாடு.

12. கடவுள் - உடல் படைத்தல் :—கடவுள் மாயையினாலே உடலைப் படைக்குமிடத்துத் தம்முடைய நினைவின் படி படைப்பாரோ? உயிரின் நினைவின்படி படைப்

பாரோ? தம்முடைய நினைவின்படி படைக்க வேண்டு மானால் உயிருக்குத் தானாக ஒன்றையும் அறியும் தன்மை இல்லை. இவ்விரண்டும் இல்லாததால், குயவன் மண்ணை எடுத்துப் பாண்டம் வனையும் இடத்துப் பசித்துன்பத்தை அடக்கும் பொருளைச் சமைப்பதற் கேற்ற பாண்டத்தையே வனைவதுபோல, கடவுள் மலசத்தியை அடக்கும் பிராரத்தத்துக் கேற்ற உடலையே படைப்பார்.

13. கடவுள் - கன்மம் கொடுத்தல் :—ஒரு வண்ணான் பலபேர் துணிகளை வாங்கிக் கூட்டி வெளுத்து, அதில் அவரவர் துணியைத் தெரிந்தெடுத்துக் கொடுப்பதுபோலவும், ஒரு மாடு மேய்ப்பவன், பலபேர் மாடுகளையும் கூட்டி மேய்த்து, அவரவர் மாட்டைத் தெரிந்து பிரித்து அவரவர் வீட்டில் கொண்டுபோய் விடுவது போலவும், கடவுள் ஒருவராய் இருந்து தமது சத்தியினாலே எண்ணிறந்த உயிர்கள் செய்யும் ஆகாமியத்தை அறிந்து, அதன் கட்டுப்பாடாகிய சஞ்சிதம் எல்லாம் ஒன்றாய் இருந்தும், அதில் அவரவர் கன்மத்தைத் தெரிந்தெடுத்து, அவரவருக்குப் பிராரத்தமாகப் புசிப்பிப்பார்.

14. கடவுள் - மலங்கழித்தல் :—வண்ணான் துணியுடன் இருந்த அழுக்கைப் போக்குவதற்கு, ஒரு கலத்தில் உவர் மண்ணைக் கரைத்துத் துணியிலே ஊட்டி, அழுக்கைப் போக்குவதுபோல, கடவுள் உயிரோடு இருக்கின்ற ஆணவ மலத்தை, மாயா கருவியையும் கன்மத்தையும் கூட்டிப் போக்குவார்.

15. கடவுள் - ஞானசாரியர் மூர்த்தம் :—விரகு அறியா இளம் பெண்ணைத், திருமணம் செய்து வைத்திருந்த மாப்பிள்ளை, பெண்ணின் பக்குவ காலம் பார்த்து வந்து செய்ய வேண்டிய சடங்கெல்லாம் செய்து, அவள் இணங்கும்படிக்குள்ள விளையாட்டுகள் செய்து, அக்காலம் வரையும் அவள் அறியாத இன்பத்தைக் கொடுத்து, அந்த இன்பத்தில் அவளை மூழ்குவிப்பதுபோல, கடவுள் பிறவா முதல்வன் ஆதலால், பரவிந்துவாகிய திருவருளே உண்மை வடிவாகத் திருமேனி கொண்டு, உயிரின் வழித்தாக ஒத்தொழுகி, முப்பொருளின் இயற்கையை அருளித் தெளிவித்துத் திருவடிகளிலே சேர்ப்பிக்க எழுந்தருளும்.

16. கடவுள் - கிருத்திய நித்தியம் :— பிணியாளர் பலர் ஆதலால், தீர்ந்து போகிற வியாதிக்குச் செய்யும் வைத்தியம், வியாதியுடனே ஒடுங்கிப் போகாமல், வைத்தியம் நிலைபெற்றதுபோல, ஒடுங்கிப் போகிற மலத்தைத் தீர்க்க வந்த உலகமும், அந்த மலத்துடனே ஒடுங்கிப்போகாமல், மலம் உடைய உயிர்கள் எண்ணில ஆதலால் ஐந்தொழில் நிலைபெற்றது.

17. உயிர் - மூவகைத் தன்மை :—உயிர்கள், ஒருமல, இருமல, மும்மலக் கட்டினர் என மூவகைத் தன்மையினர். அதில் மும்மலத்தார் தன்மை : ஆணவமலம், கன்மமலம், மாயா மலமும் தொடர்பு ; இவர்களுக்கு ஆணவமலம் முழுவாசியும் திருவருள் அணுவாகவும் இருக்கும். இவர்கள் மும்மல மயக்கம் உடையவர். ஆதலின் மும்மலத்தார். இந்த மூவகை மயக்கங்களினலே ஆகாமியம் எழுந்து வெகு காலம் பிறந்து இறந்து இன்ப துன்பம் நுகர்ந்து, அதனல் யான் எனது என்பது இரண்டும் தீர்ந்து, பின்பு முதல்வன் மானிட வடிவாக எழுந்தருளி அருளுவதால், வேரும் கிழங்கும் அற்றுத் திருவடியிலே ஒன்றுபடுவார்கள்.

இருமலத்தார் தன்மை: ஆணவம், கன்மம் ஆகிய இரண்டு மலங்களே தொடர்பு. அதனல் இவர்களுக்கு ஆணவ மலத்தின் சத்தி அரைவாசியும், சிற்பரமாகிய திருவருள் அரைவாசியுமாக இருக்கும். இவர்களுக்கு ஆணவ மல மயக்கமும் கன்மமல மயக்கமுமே அல்லது மாயா மல மயக்கம் இல்லை. மற்ற இரண்டு மல மயக்கங்களினலே ஆகாமியம் எழுந்து, சிறிது காலம் பிறந்து இறந்து இன்ப துன்பம் நுகர்ந்து, அதனல் யான் எனது என்பது இரண்டும் தீர்ந்து, பின்பு தலைவன் மான், மழு, நான்கு கைகளுடனே தேவவடிவாக எழுந்தருளி அருளுவதால், வேரும் கிழங்கும் அற்றுத் திருவடியிலே ஒன்றுபடுவார்கள்.

ஒருமலத்தார் தன்மை : ஆணவ மலம் ஒன்றுமே தொடர்பு. ஆணவ மலத்தின் சத்தி கால்வாசியும், சிற்பரமாகிய திருவருள் முக்கால்வாசியுமாக உடைய இவர்களுக்கு, ஆணவ மல மயக்கமே அல்லது மாயைமல, கன்மமல மயக்கம் இல்லை. மற்ற ஆணவ மலத்தினலே ஆகாமியம் எழாமல் பிறவாமல் ஒரு உடலிலே, தலைவன் கட்டளையிட்டு அருளின பிராரத்தத்தை நுகர்ந்து, அதனல்

யான், எனது என்பது இரண்டும் தீர்ந்து, பின்பு தலைவன் அறிவே சொரூபமாக உள்ளத்தினுள்ளே எழுந்தருளி அருளுவதால் வேரும் கிழங்கும் அற்றுத் திருமடியிலே ஒன்றுபடுவார்கள்.

18. உயிர் - பல :—ஓர் உயிரின் தன்மையைப்போல ஓர் உயிரின் தன்மை இல்லை; ஆதலால் உயிர் பல.

19. உயிர் - அறிவுள்ளன :—உயிர் தானே அறிய மாட்டாது. ஆகையினால், 'கடவுளுக்கே அறிவு அல்லாது உயிருக்கு அறிவு இல்லை' என்றால், உயிருக்குப் பிறப்பு இறப்பும் நிரய ஒறுப்பும், வேதாகமங்களில் விதிவிலக்குச் சொல்ல வேண்டியதும் இல்லையாம். ஆதலின், கடவுள் தானே அறியும் அறிவுளன். உயிர் அறிவித்தால் அறிகின்ற சிற்றறிவினது; காட்டும் ஒளியுடைய ஞாயிறும் காணும் ஒளியுடைய கண்ணும்போல.

20. உயிர் - சேர்ந்ததன் வண்ணம் :—உயிர் மலத்தோடு கூடினால் மல அறிவாய் நிற்கும்; சிவத்தோடு கூடினால் கடவுள் அறிவாய் நிற்கும். ஆகாயமானது இருளோடு கூடினால் இருளாய் நிற்கும்; ஒளியோடு கூடினால் ஒளியாய் நிற்கும்; அதுபோல என்று அறிக.

21. உயிர் - உடல் பற்றல் :—படிக மலையில் எந்தப் புறத்திலே நிறத்தைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்ளுவது போலவும், அக்கினி மலையிலே எந்தப்புறத்திலே பஞ்சைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்ளுவதுபோலவும், நிறைந்திருக்கின்ற உயிர், கடவுள் எந்த உலகிலே உடலைக் கொடுத்தாலும் பற்றிக் கொள்ளும்.

22. உயிர் - தொழில் :—ஐந்தொழில் உயிருக்கா? உடலுக்கா? உயிர் நித்தியமானதால் அதற்கு இல்லை. ஆயினும், ஒருவன் ஒரு மரத்தின் பழத்தை மட்டும் துய்க்க உடையவனானாலும் அந்த மரம், இலை, பூ, காய் இந்த நாலுக்கும் உடையவன் ஆவதுபோல, படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று விதப்படும் உடலின் வழித்தாய், மறைத்தலை, அருளலை உயிர் நுகர்வதால், உயிர்க்கே ஐந்தொழிலாம்.

23. உயிரைத் தொழிற் படுத்தல் :—கடவுள், உயிருக்கு அறிகருவியை உண்டாக்குதலே படைப்பு. அறிகரு

விக்கு முதலாகிய மனதை நிலை நிறுத்தலே காத்தல். அறி கருவியை நீக்குதலே அழித்தல். அறிதல் தொழில் நிகழு மிடத்து இன்ப துன்பங்களைக் கொடுத்து அதில் அறியாமை யைச் செய்தலே மறைத்தல். அறிதல் தொழில் நிகழும் இடம் அருளல்.

24. உயிர் - உலக முதல்வன் :— உலகிற்குக் கடவுள் முதல்வன் எனின், முதலில் படைத்த ஒரு உடலிலே கொடுத்த பிராரத்தத்தினாலே ஆணவ மலத்தைத் தீர்த்துத் தமது திருவடியிலே சேர்ப்பிக்க வேண்டும். அப்படியின்றி எண்ணிறந்த காலம் உடலைக் கொடுத்தலால் கடவுள் முதல் வன் அன்று. உலகு வளரும்படியுள்ள மலசத்தியாகிய அவாவையுடையவன் உயிரானதால், உயிரே உலகிற்கு முதல்வன். குருடுபோலும் மலசத்தி ; குருடன் போலும் உயிர் ; கோல்போல் உடல் ; கோல் கொடுப்பவன்போல் கடவுள். குருடனுக்குப் போகவேண்டிய இடத்துக்கே கோல் கொடுப்போன் இரங்கிச் செல்லுதலால், நடக்கும் தொழிலுக்கு முதல்வன் குருடன் என்று அறிக.

25. உயிரின் பிறப்பு :— அழியாது இருக்கிற உயிருக் குப் பிறப்பு இறப்பு எதுவெனில், உயிர் மாயா கருவிகளைப் பற்றி அறிதலே பிறப்பு. மாயா கருவிகளைவிட்டு நீங்கின அறியாமையே இறப்பு. இது ஓர் ஊரிலே எக்காலமும் குடி யிருக்கிற ஒருவர், அந்த ஊர் மணியம் ஏற்றபொழுது, இந்த ஊருக்கு மணியக்காரர் வந்தார் என்றும், மணியம் மாறின வுடனே இந்த ஊருக்கு மணியக்காரர் போய்விட்டார் என் றும் பேர் பெறுதல் போலவாம்.

26. உயிர் - அறிதொழில் கெடுதல் :— உயிர், உயிர் அறிவு, உயிர் அறிவுக்கு அறியும் குணம், உயிர் அறிவுக்கு அறியும் தொழில். ஆக 4. ஆணவ மலம், உடல், இன்ப துன் பம், உடலையும் இன்ப துன்பத்தையும் உண்டுபண்ணின கடவுள். ஆக 4. ஆக வகை 2 க்கு 8. அதில் மருட்காலம் உடலும், அறிதொழிலுமே அழிந்தன. ஆக அழிந்த பொருள் 2. இருந்த பொருள் 6. இது, கண், கண் ஒளி, கண் ஒளிக்குக்காணும் குணம், கண் ஒளிக்குக் காணும் தொழில் ஆக 4. இருள், விளக்கு, பொருள் விளக்கையும் பொருளை யும் உண்டாக்குவது. ஆக 4. வகை 2க்கும் 8. இதில் எண் ணெய் அற்றுப்போன இடத்தில் விளக்கும் கண் ஒளிக்குக்

காணும் தொழிலுமே அழிந்தது. ஆக அழிந்த பொருள் 2. இருந்த பொருள் 6 என்பது போலாம்.

27. உயிரின் ஆறு நிலைகள் :—மறைப்பு நிலை, சிறிதறிவு நிலை, தூய நிலை என்னும் மூன்று நிலைகளும் காரண காரியமாக ஆறுவகைப்படும். அவற்றுள் காரண மறைப்பு நிலை: கண்ணானது தனது ஒளிக்குக் காணும் தொழில் கெட்டுக் காணும் குணம் கெடாமல் இருளில் விழித்திருத்தல்போல, தொன்மை முதல் துறக்கம்வரை உயிர் தனது ஞானத்துக்கு அறியும் தொழில் கெட்டு அறியுங் குணம் கெடாமல் ஆணவமலத்தில் அழுந்திக் கிடத்தல்.

காரிய மறைப்பு நிலை : உயிர் அறிகருவிகள் நீங்கி நனவு முதல் அதீதம் வரையுள்ள ஐந்து நிலைப்படுதல்.

காரணச் சிறிதறிவு : கண்ணானது தனது ஒளிக்குக் காணும் தொழில் கெட்டுக் காணுங் குணம் கெடாமல் இருளில் விழித்திருக்கிறபோது, விளக்கைக் கண்டு விளக்கு ஒளியைப் பொருந்தல் போல, முதல் படைத்தல் முதல் வீடு வரையுள்ள எண்ணிறந்த படைப்புக் காலங்களிலே மாயா உடல்களை அருவினையாம் அவாவால் பற்றுதலாம்.

காரணச் சிறிதறிவு நிலை : கேவலப்பட்டுக் கிடக்கும் உயிர் துரியாதீதம் முதல் சாக்கிரம் வரையுள்ள ஐந்து நிலைப் படுதல்.

காரணத் தூய நிலை : கண்ணானது தனது ஒளிக்குக் காணும் தொழில் கெட்டுக், காணும் குணம் கெடாமல் இருளில் விழித்திருக்கிறதுபோல, விளக்கைக் கண்டு விளக்கொளியைப் பொருந்தி நின்று, பொருள்களைத் திரிவுகாட்சியாகக் கண்டு நிற்கிறபோது, ஞாயிறு தோன்றிய உடனே இருளையும் விளக்கையும் விட்டு நீங்கி அந்தக் கண் ஒளி கண் கூச்சத்துடனே கதிரவன் கதிரைக் கலந்து பொருள்களைத் திரிவுறக்காண்டல்போல, தொன்மைப் படைப்பு முதல் வீடுவரையுள்ள எண்ணிறந்த படைப்புக் காலங்களிலே மாயா உடல்களைப் பற்றி நிற்கும் காலம், திருவருளே மனித வடிவு கொண்டு வந்ததென்று மலத்தின் வாடையினாலே அறியாமல், அந்தத் திருமேனி வாடையில் அகப்பட்டு அறியாமை பூருவமாகவும், மனப்பூருவ மென்னும் அறிவு பூருவமாகவுஞ் செய்யப்பட்ட சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாலு சிவ நல்வினையும் உபாய

உண்மையென்ன எட்டு ஆனதில் உண்மை ஞானம் ஒன்று நீங்கலாக நின்ற எழு சிவ நல்வினையிலும் முயன்று ஐந்து மலங்களையும் நீக்குதல்.

காரிய தூய நிலை: மாசிலா நனவுமுதல் ஐந்து நிலையும் பொருந்துதல். ஆக இது உயிரின் ஆறு நிலை என்று அறிக.

28. உயிரின் காரிய நிலைவகை:—காரிய அறியாமை, காரியச் சிறிதறிவு, காரியத் தூய்மை என மூன்று. அவற்றுள் கீழான நிலையாகிய காரிய அறியாமை வகை: நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என 5; அதில் தொழில் நனவு நிலை: பொறிகள் 5; உறுப்புகள் 5; நுண்ணிய பொருள்கள் (தன்மாத்திரை) 5; அகக் கருவிகள் 4; உள்ளம் 1; காற்றுகள் 10; தொழில் உறுப்பு வினைகள் 5. ஆக 35 கருவிகளுடனே வந்து நின்று அறிவு கலக்கமாக இருக்கும் தருவாய் நனவு.

கனவு நிலை: பொறிகள் 5; தொழில் உறுப்புகள் 5. ஆக பத்துக் கருவிகளும் காற்பரளையில் நிற்க மற்ற 25கருவிகளுடனே கழுத்தில் வந்து நின்று, அறிவு கெட்டிருக்கும் தருவாய் கனவு.

உறக்க நிலை: நுண்ணிய பொருள்கள் 5; சித்தம் நீங்கலாக அகக் கருவிகள் 3; பிராணன் நீங்கலாக காற்றுகள் 9; தொழில் உறுப்பு வினைகள் 5. ஆக 22 கருவிகளும் மிடற்றில் நிற்க, மற்ற 3 கருவிகளுடனே நெஞ்சில் வந்து நின்று, உடல் அயர்ந்தும் அயராமலும் இருப்பது உறக்கம்.

பேருறக்க நிலை: சித்தம் ஒன்று நெஞ்சில் நிற்க, மற்ற இரண்டு கருவிகளுடனே கொப்பூழில் வந்து நின்று பிராணவாயு அதிக நடையாக இருப்பது பேருறக்கம்.

உயிர்ப்படக்க நிலை: பிராணன் ஒன்று உந்தியில் நிற்க மற்ற உள்ளம் ஒன்றுடனே மூலத்தானத்தில் வந்து நின்று, பிராணன் இயக்கம் இல்லாதிருப்பது உயிர்ப்படக்கம். ஆக இப்படிக் கீழாம் நிலையாகிய காரிய அறியாமை நிலையின் வகை 5.

இடை நிலையாகிய காரிய சிறிதறிவு வகை: உயிர்ப்படக்கம், பேருறக்கம், உறக்கம், கனவு, நனவு ஆக 5. இந்த ஐந்து நிலையாவன: அப்படி அதிதப்பட்டுக் கிடக்கும் நிலையில் சிவத்துக்கு அபின்னமாகிய சத்தி, விந்து நாதத்தின் இடமாக நின்று சொல்லுதற்கு அரிதாகிய அறிவாய், பிர

காசமாய், உயிருக்குள்ள கன்மத்தை நுகரவேண்டி, மூலத்தானத்தில் ஒரு நாதமாகிய சூக்குமையைக் காரியப்படுத்த, அந்தச் சூக்குமை எழுந்து உந்தியில் வந்து பொருந்தும். இனிச் சதாசிவன், சாதாக்கிய தத்துவத்தின் இடமாக நின்று உந்தியில் பைசந்தியைக் காரியப்படுத்த, அந்தப் பைசந்தி வெவ்வேறாய அக்கரங்களை ஒழுங்குபடத் தோன்றுதல் உண்டாகும்படி, மயில் முட்டைக்குள் நீரில் பல வண்ணங்களும் உருத்தெரியாமல் நின்றாற்போல ஒடுக்கி, நெஞ்சில் வந்து உணர்வு மாத்திரமாய் உருத்தெரியாமல் நிற்கும். இனி மகேசுரன் ஈசுர தத்துவத்தின் இடமாக நின்று நெஞ்சில் மத்திமையைக் காரியப் படுத்த, இந்த மத்திமை பிராணவாயுவுடனே பொருந்தி வருகின்ற அவ்வக்கர சொரூபங்கள் எல்லாவற்றையும் ஒழுங்குபட நிறுத்தி, கருவிகளுக்கு முற்பட்டு வரும் செவிக்குக் கேளாமல் உள்ளே அறிவதாகிய தொனியாக மிடற்றில் வந்து பிறக்கும். இனி உருத்திரன் சுத்தவித்தையில் நின்று மிடற்றில் வைகரியைக் காரியப்படுத்த, அந்த வைகரி, உதானவாயுவானது சுழுமுனையில் சேரும் பிராணவாயுவோடும் கூடுதலால், வந்த சத்தமானது சொல்லுவோன் செவிக்குக் கேட்க அவன் நினைத்த பொருள்களைச் சொல்லும். ஆக இவை நாலு வாக்கின் காரியப்பாடு.

இப்படி வாக்குகள் நான்கிலும் உணரும் ஆன்மா, சகல அவத்தைக் கருவியைப் பொருந்தி வருகின்றது எப்படியெனில், பராசத்தி அருளினாலே அசுத்த மாயா தத்துவமாகிய கலை ஆன்மா விடயங்களைப் பொருந்தும்படிக்கு மூலத்தானத்தில் ஆன்மாவுக்கு ஆணவ மலத்தைச் சிறிது நீக்கும். ஆன்மா இந்தக் கலையே வடிவாக உந்தியில் வந்து பிராணவாயுவைக் கூடுவன். இது துரிய நிலை. உயிர் இந்தப் பிராணவாயுவைக் கூடி நெஞ்சில் வருவன். இந்த நெஞ்சில் அந்தப் பொருள்களைப் புத்திதத்துவம் நிச்சயித்து ஆன்மாவுக்குக் கொடுக்கின்றபோது, வித்தை தத்துவமானது ஆன்ம ஞானத்துக்கும் புத்திதத்துவத்துக்கும் இடையிலே நின்று பொருள்களை அறியும் தொழில் உயிர் பொருந்தும்படிக்கு உயிர்க்கு அறிவை எழுப்பும். இனி அராகதத்துவம் உயிருக்குப் பெற்ற இன்பபோகத்திலுள்ள ஆசையைச் சிறிதாக்கிப் பெருத்த இன்ப போகத்தில் ஆசையைப்

பெருக்கப் பண்ணிக்கொண்டு நிற்கும். நியதி தத்துவம் அரசன் ஆணைபோல உயிருக்குக் கன்மத்தை நிச்சயித்து நிறுத்திக் கொண்டு நிற்கும். காலமுதல் நிகழ் காலத்துப் பலத்தினையும், கழிகாலத்து எல்லையினையும், எதிர் காலத்துப் புதுமையினையும் உயிருக்குப் பொருத்திக் கொண்டு நிற்கும். ஆக இந்த முதல்களை முதல்வனுடைய சத்தி பொருந்தி இப்படிச் செய்விக்க இந்தக் கலாதி ஞானங்களால் உயிர் பொருள்களைப் புருடமாக நின்று பற்றும். உயிர் இந்தப்படி இச்சா ஞானக் கிரியா சொருபனாய்ப் பொதுமையில் நின்ற தறுவாய் உயிருக்குப் பஞ்ச கஞ்சுகன் என்றும், புருடதத்து வன் என்றும் பெயர். இப்படிப் புருடத்துவனை தறுவா யில், பிரகிருதிகுண ரூபமாய் உயிரைக்கூட, உயிருக்கு மிகுந்த குணமே வடிவாய் மேவி நிற்கும் தறுவாயில், புத்தி யானது ஆன்மாவுக்குப் பொருள்களைத் துய்ப்பிக்கவேண்டி
65 பாவகமாக உறுதி பண்ணிக்கொண்டு நிற்கும். அகங்கார மானது உயிர் துய்க்க வேண்டி இந்திரியங்களுக்கு முற்பட் டுக்கொண்டு நிற்கும். மனமானது ஆசையே சொருபமாக ஒன்றைச் சங்கற்பிக்கையாகிய நினைவும் அநவரத நடையும் உயிருக்குக் கொடுத்துக் கொண்டு நிற்கும். சித்தமானது மனதத்துவ நினைவில் வந்து உயிருக்குச் சந்தேகத்தைக் கொடுத்துக் கொண்டு நிற்கும். ஆக இது உறக்க நிலை. உயிர் இவற்றுடனே கண்டத்தானத்தில் வருவன். இந்தக் கண்ட சொப்பனத்தில் நனவிலே துய்க்கும் தன்மை போலத் துய்த்தாலும் துய்ப்பன். இது கனவு நிலை. உயிர் இந்தப்படி இலாடத்தானத்திலும் வருவன். இந்த இலாடத்தானத்தில் துய்க்கும் முறையாவது, ஆகாசத்தினின்று சோத்திரத் தைப் பொருந்திச் சத்தத்தை அறியும். அதனால் வாக்கு வசனிக்கும். வாயுவில் நின்று துவக்கைப் பொருந்திப் பரிசத்தை அறியும். அதனால் பாதம் கமனிக்கும். தேயுவி னின்று சக்ஷுவைப் பொருந்தி உருவத்தை அறியும். அதனால் பாணி தானஞ் செய்யும். அப்புவினின்று சிங்குவை யைப் பொருந்தி இரதத்தை அறியும். அதனால் பாயுரு விசர்க் கத்தைப் பிரித்துவிடும். பிருதிவியினின்றும் ஆக்கிராணத் தைப் பொருந்திக் கந்தத்தை அறியும். அதனால் உபத்தம் ஆனந்தத்தை விடும். இது சாக்கிர நிலை. இப்படிப் பராசத்தி அருளினாலே பொருத்தப்பட்ட மாயா தத்துவங்களுடனே

(தொடரும்)

எல்.டி., திரு. என். பூதலிங்கம் பிள்ளை ex. எம்.எல்.சி., சென்னை அறநிலையப் பாதுகாப்பாளர் திரு. எ. உத்தண்டராமன், ஐ.எ.எஸ்., சிவப்பெருந்திரு. குன்றக்குடி அடிகளார் ஆகிய பெருமக்கள் வரவேற்புரை, தொடக்கவுரை, வாழ்த்துரைகள் வழங்கினர். புதுக்கோட்டை சி. பிருந்தாதேவி, எம்.சி., ஈரோடு அ. ஞானசம்பந்தன், திருநெல்வேலி வித்துவான் ந. பாலம்மாள், ஈரோடு எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், பி.எ., எல்.டி., தூத்துக்குடி கோமதி பொன்னம்பலம், பி.எ.,பி.டி., கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், எம்.எ., சைவப்புலவர் மு. சுந்தரேசம் பிள்ளை, தூத்துக்குடி ஈசுவர வடிவுநாயக அம்மையார், பழனி கா. அரங்கசாமி முதலியார், தூத்துக்குடி சி.டி. ஈசுவரநாயகம்,எம்.எ.,எல்.டி., தருமையாதீன வித்துவான் முதுபெரும்புலவர் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், சைவப்பெரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.எ.,எல்.டி., குலசை வீரசிவம், பேராசிரியர் சித்தாந்தகலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை, திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், பி.எ.,பி.எல்., ஆகிய பேரறிஞர்கள் விரிவுரையாற்றினர். திரு. என். அகஸ்தியலிங்கம் பிள்ளை, இரணியல் திரு. பி. இராமசாமிபிள்ளை பி.எ., பி.எல்., ex. எம்.எல்.எ., திரு. சி. வள்ளிநாயகம்பிள்ளை பி.எ., பி.எல்., ஆகிய மூவரும் முறையே மூன்று நாட்களிலும் நன்றியுரை நவின்றனர்.

நாகர்கோயில் நன்னெறி மன்றம், மெய்ந்நெறிக் கழகங்களின் சார்பில் சமயச்சிறப்புடைய கூட்டங்களும் நிகழ்ச்சிகளும் "சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை" முதலியனவும் நன்கினிது நடைபெற்றன. சமாஜப் பேரன்பர் திரு. சி. வள்ளிநாயகம் பிள்ளை, பி.எ.பி.எல்., வித்துவான் திரு. பூதலிங்கம் பிள்ளை முதலிய அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

அடியார் மன்றம், சென்னை :—25-9-56 செவ்வாய் மாலை 7 மணிக்குச் சென்னை எ. ஆர். சி. பெண்கள் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியை திருமதி மரகதவல்லி அம்மையார், பி.எ.,எல்.டி. அவர்கள் "திருநாளைப்போவார் நாயனர்" பற்றியும், 2-10-56 ஞாயிறு மாலை திரு. ஐயாறடிகள் "அருள்நந்தி சிவாச்சாரியார்" பற்றியும் சிறந்த விரிவுரைகள் ஆற்றினர். மன்றத்தின் அமைப்பாளர் திரு. எம். பி. எஸ். வேலாயுதம் பிள்ளை அவர்களின் 57-ம் ஆண்டு நிறைவு விழா 9-9-56 அன்று நன்முறையிற் கொண்டாடப்பெற்றது.

கலைமகள் திருவிழா :—திரிசிரபுரம் சைவ சித்தாந்தசபையின் சார்பில் 5-10-56 முதல் 13-10-56 வரை மலைக்கோட்டை மண்டபத்தில் சொற்பொழிவுகள் நடைபெறும்.

கோவை ஆர். எஸ். புரம் புரந்தரதாசர் மண்டபத்தில், சொற்பொழிவுகளும் இன்னிசை விருந்துகளும் தேவிபூசையும், 3-10-56 முதல் 14-10-56 வரை சிறப்புற நடைபெறும். பித்துக்குளி முருகதாசர் அமைப்பாளர்.

பேரூர் சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரியில் 11-10-56 முதல் 13-10-56 வரை கலைமகள் விழாச் சொற்பொழிவுகள்.

வள்ளலார் 133-வது ஆண்டுப் பிறப்பு விழா :-புஞ்சைப் புளியம்பட்டியில் 5-10-56 முதல் 7-10-56 வரை பல பெரியோர்கள் சொற்பொழிவாற்றினர். 5-10-56 அன்று வடலூரில் சோதி வழிபாடு, உணவு அளிப்பு, சொற்பொழிவுகள், வள்ளலார் வழிபாடு முதலியன நிகழ்ந்தன.

கோவை சன்மார்க்க சங்கம், தேவாங்கப்பேட்டையில் வள்ளலார் வழிபாடும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. மாதர் சங்கத்தில் தனியாகவும் சிறப்புற நடந்தன.

பிரிவாற்றாமை

நமது சமாஜ போஷகருள் ஒருவரும் 1949-ல் நீலகிரி உதகமண்டலத்தில் கோடை வகுப்பிற்குச் சில ஏற்பாடுகள் செய்தவரும், மாதம் ரூபா நூறு வீதம் சமாஜச் சார்பில் சமயப் பிரசாரம் செய்வதற்கு ஓராண்டு நன்கொடையளித்தவரும், சென்னைத் தமிழ்ச் சங்கத் தலைவரும், கோவை நகர நாட்டாண்மைக் கழகங்களின் தலைவராகத் தொடர்ந்து பல ஆண்டுகள் பல பல பணிகள் புரிந்தவரும், கோவை நெசவுச்சாலைகள் பலவற்றின் நிர்வாகத்தில் முக்கியஸ்தரும், சென்னை மாகாணக் கூட்டுறவு இயக்கத்தலைவராகப் பல ஆண்டுகள் பல அரிய திட்டங்கள் வகுத்தவருமாகிய திவான் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்கள் சிவபதம் எய்திய செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவிக்கிறோம். அவருடைய ஆன்மா இறையடி நீழலில் என்றும் இன்புறுவதாகுக.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi. Edited by C M Ramachandran Chettiar, B.A, .B.L., and Published by S.Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 2, Seetha Rama Nagar, Cuddalore N. T.